

# மனித உரிமைகள்

## தொகுதி 02

பயிற்சி வழங்குநர் வழிகாட்டி

# கண்ணோட்டம்

இது 4 தொகுதிகளை உள்ளடக்கிய பயிற்சி வழிகாட்டியின் இரண்டாவது தொகுதியாகும். இத்தொகுதி பங்கேற்பாளர்களுக்கு மனித உரிமைகளை பற்றிய ஒரு முழுமையான புரிதலை அளிப்பதற்கு முயல்கின்றது.

மனித உரிமைகள் என்பது ஒரு மேற்கத்தேய கருத்து என்கிற பொதுவான கருத்தை எதிர்ப்பதற்கு, மனித உரிமைகளை பற்றிய உள்ளூர் சார்ந்த ஒரு பரந்துபட்ட புரிதலை இந்த தொகுதி ஊக்குவிக்கிறது. உடன்படிக்கைகள்அடிப்படையிலான பொறிமுறைகள் மற்றும் சாசன அடிப்படையிலான பொறிமுறைகளின் ஊடாக மனித உரிமைகள் பொறிமுறைகளின் மேம்படுத்தலுக்கு ஐக்கிய நாடுகளின் பங்களிப்பையும் இந்த தொகுதி ஆய்வு செய்கின்றது.

குழுச்செயற்பாடு மற்றும் முன்வைப்புகளைப் பயன்படுத்தி, பங்கேற்பாளர்களின் திறன்கள் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் மீது மேம்படுத்தப்படும். இந்த தொகுதியை நடைமுறைப்படுத்துவதன் முடிவில், அடிப்படை உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் நிவாரணப் பொறிமுறைகளை எவ்வாறு அணுகுவது என்பதையும் இலங்கையின் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல்களை எவ்வாறு அணுகுவது என்பதையும் பங்கேற்பாளர்கள் அறிந்துகொள்வார்கள்.

இந்தத் தொகுதி 6 மணித்தியால காலம் நடாத்தப்படுகிற 7 அமர்வுகளை உள்ளடக்கியது.



# இணைய குறிப்பு

தொகுதி 2 மற்றும் விளக்கக்காட்சியின் இணைய பதிப்பை அணுக,
கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்:

அல்லது உங்கள் உலாவியில் கீழே உள்ள URL இணைப்பை தட்டச்சு செய்யவும்.

## www.shorturl.at/aGKQ2

# அமர்வுத் திட்டம்

நேரம்: மு.ப 09:00 - பி.ப 05:00 (6 மணித்தியாலங்கள்)

| ஆரம்பிக்கின்ற நேரம் | ஒதுக்கப்பட்ட நேரம் | அமர்வு |
|---|---|---|
| மு.ப 09:00 | 15 நிமிடங்கள் | 1 வது நாள் மீளாய்வு |
| மு.ப 09:15 | 1 மணித்தியாலம் | அமர்வு 01: மனித உரிமைகள் என்றால் என்ன?<br>*செயற்பாடு & கலந்துரையாடல்* |
| மு.ப 10:15 | 1 மணித்தியாலம் | அமர்வு 02: மனித உரிமைகள் வரலாறு ஒரு காலவரிசை |
| மு.ப 11:15 | 15 நிமிடங்கள் | இடைவேளை |
| மு.ப 11:30 | 1 மணித்தியாலம் | அமர்வு 03: இலங்கையில் மனித உரிமைகள்<br>*முன்வைப்பு மற்றும் கேள்வி-பதில்* |
| பி.ப 12:30 | 1 மணித்தியாலம் | மதியநேர இடைவேளை |
| பி.ப 01:30 | 1 மணித்தியாலம் | அமர்வு 04: மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பங்களிப்பு<br>*முன்வைப்பு மற்றும் கேள்வி-பதில்* |
| பி.ப 02:30 | 30 நிமிடங்கள் | அமர்வு 05: இலங்கை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களை கடைபிடிக்கும் பாங்கு<br>*முன்வைப்பு மற்றும் கேள்வி-பதில்* |
| பி.ப 03:00 | 45 நிமிடங்கள் | அமர்வு 06: இந்திய அனுபவம்<br>*முன்வைப்பு மற்றும் கேள்வி-பதில்* |
| பி.ப 03:45 | 15 நிமிடங்கள் | இடைவேளை |
| பி.ப 04:00 | 45 நிமிடங்கள் | அமர்வு 07: யோக்யகர்த்தா கோட்பாடுகள் - ஜோடிகளாக பிரதிபலிப்புக்கள் மற்றும் கலந்துரையாடல்கள் |
| பி.ப 04:45 | 15 நிமிடங்கள் | நிறைவு மற்றும் இறுதிக் கருத்துகள் |

# அமர்வு 01: மனித உரிமைகள் என்றால் என்ன?

*கலந்துரையாடலை தொடர்ந்து ஒரு செயற்பாடு*

## நேரம்

1 மணித்தியாலம்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- மனித உரிமைகள் என்றால் என்ன என்பதை விளக்க முடியும்.
- மனித உரிமைகளின் அம்சங்களை பட்டியலிட முடியும்.

## தேவையான கருவிகள்

- பிளிப் சார்ட் (Flip chart) காகிதம் மற்றும் மாக்கர்கள்
- ஒரு சுவரில் சுவரொட்டி காகிதத்தை காட்டுவதற்கு டேப்/ இடமாற்றக்கூடிய ஸ்ப்ரே

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்:

- பங்கேற்பாளர்களை 5 குழுக்களாக பிரிக்கவும்.
- ஒரு மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கைக்காக ஒருவருக்கு தேவைப்படுகின்ற விடயங்களின் ஒரு பட்டியலை எழுதுவதற்கு ஒவ்வொரு குழுவையும் 30 நிமிடங்களை எடுத்துக்கொள்ளுமாறு கேட்கவும். ஒருவருக்கொருவர் பேச வேண்டாம் என்று பங்கேற்பாளர்களை கேட்டுக்கொள்ளவும்.
- முதலில் பங்கேற்பாளர்கள் அடிப்படை தேவைகளை எழுதுவார்கள். 5-10 நிமிட இடைவெளியில் ஒவ்வொரு குழுவிற்கும் சென்று பின்வரும் கேள்விகளை கேட்கவும்:
  1. நீங்கள் வேலைக்கு செல்கின்றீர்கள் என்று கற்பனை செய்துபார்க்கவும் - உங்களுக்கு என்ன வகையான போக்குவரத்து தேவைப்படும், எந்த வகையான வேலையை செய்ய நீங்கள் விரும்புகின்றீர்கள், ஒரு மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கையை நீங்கள் விரும்பினால், வேலையில் நீங்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகின்றீர்கள்?

| அடையாளம் காணப்பட்ட தேவைகள் | பொருந்துகின்ற மனித உரிமைகள் |
|---|---|
| உணவு | உணவிற்கான உரிமை |
| நீர் | சுத்தமான நீரிற்கான உரிமை |
| குடும்பம் | ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கான உரிமை |
| | சம்மதத்துடன் சுதந்திரமாக திருமணம் செய்து கொள்வதற்கான உரிமை |
| | குழந்தைகளை பெறுவதற்கான உரிமை |
| | குழந்தைகள் வேண்டாம் என்று தெரிவு செய்வதற்கான உரிமை (உடல் சுயாட்சிக்கான உரிமை) |
| காதல் | விருப்பமான ஒரு துணையை தேர்ந்தெடுப்பதற்கான உரிமை |
| | பாலீர்ப்பின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாமல் இருப்பதற்கான உரிமை |
| வன்முறையின்மை | சித்திரவதையிலிருந்து சுதந்திரம் |
| | சரியான செயன்முறைக்கான உரிமை |
| | பாலின சமத்துவத்திற்கான உரிமை |
| | உடல் ரீதியான தண்டனையிலிருந்து விடுபடுவதற்கான உரிமை |
| சமூக/மத நடவடிக்கைகளில் ஈடுபடுதல் | மதம் மற்றும் பிறருடன் மதத்தை கடைப்பிடிப்பதற்கான உரிமை |
| | ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் |
| | ஒருவருடைய மொழியை ஊக்குவிப்பதற்கான உரிமை |
| | கலாசாரத்தை அனுபவிப்பதற்கான உரிமை |
| ஊழல் செய்யாத ஆட்சியாளர்கள் | வாக்களிப்பதற்கான உரிமை |
| | முறையான, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலிற்கான உரிமை |
| சுகாதார பாதுகாப்பு | சுகாதார பாதுகாப்பிற்கான உரிமை |
| | அறிவியல் முன்னேற்றத்தின் பலன்களை அணுகுவதற்கான உரிமை |
| கல்வி | கல்விக்கான உரிமை |
| | சிந்தனை சுதந்திரம் |
| | வெளிப்பாட்டு மற்றும் வெளியீட்டு சுதந்திரம் |
| அரசாங்கத்தால் மரியாதையுடன் நடத்தப்படுதல் | சமத்துவம் மற்றும் பாகுபாடின்மைக்கான உரிமை |
| நீதி | சட்டத்தின் முன் சமத்துவத்திற்கான உரிமை |
| | சட்டத்தின் சம பாதுகாப்பிற்கான உரிமை |
| | சரியான செயன்முறைக்கான உரிமை |
| | பரிகாரம் செய்யும் உரிமை |
| வீடு | சொந்த காணிக்கான உரிமை |
| | ஒரு தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமை |
| | அந்தரங்கத்துக்கான உரிமை |
| பணம் | ஒரு தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமை |
| | சொந்த சொத்திற்கான உரிமை |
| மனநல ஆரோக்கியம் | ஓய்வுக்கான உரிமை |
| | மனநல சேவைகளிற்கான உரிமை |

2. உங்களது உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக கற்பனை செய்துபார்க்கவும். உங்களுக்கு என்ன வகையான சுகாதார உதவி தேவையாக இருக்கும்?
3. ஒரு மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கைக்கு உங்களுக்கு எவ்வகையான அரசாங்கம் தேவை? நீங்கள் அரசாங்கத்தால் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகின்றீர்கள்?
4. வன்முறை இருந்தால் ஒரு மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழ முடியுமா?
5. உங்களுக்கு எதிராக குற்றம் மற்றும் அநீதி இழைக்கப்பட்டால் உங்களால் ஒரு மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழ முடியுமா?

- பட்டியல்கள் பூர்த்திசெய்யப்பட்ட பின்பு, ஒவ்வொரு குழுவையும் அவர்களுடைய பட்டியல்களை முன்வைக்குமாறு கோரவும்.

- அணிகள் ஒரே மாதிரியான பட்டியல்களை கொண்டிருக்கும். புதிய/ தனித்துவமான பதில்களை முன்னிலைப்படுத்தவும்.

- அனைத்து சுவரொட்டிகளையும் ஒரு சுவரில் காட்சிப்படுத்தவும்.

- ஒரு மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கைக்கான தேவைகளாக அனைத்து அணிகளும் ஒரே மாதிரியான விடயங்களையே பட்டியலிட்டுள்ளன என்பதை விளக்கவும். ஏனென்றால், மனிதர்களாகிய எமது தேவைகளும் அபிலாஷைகளும் ஒரே மாதிரியானவையே. மனிதனாக இருப்பதன் மூலம் எமக்கு சில தேவைகள் மற்றும் அபிலாஷைகள் இருக்கின்றன. உரிமைகள் என்ற கருத்து நீங்கள் மனிதனாக இருக்கின்ற காரணத்தால் உங்களுக்கு இருக்கின்ற இந்த பொதுவான தேவைகள் மற்றும் அபிலாஷைகளை அடிப்படையாக கொண்டது.

- பங்கேற்பாளர்களால் பட்டியலிடப்பட்டுள்ள தேவைகள் மற்றும் அபிலாஷைகளுக்கும் மனித உரிமைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பை ஆய்வு செய்யவும். பங்கேற்பாளர்களின் பட்டியல்களிலுள்ள ஒவ்வொரு உருப்படியையும் எடுத்து, அதற்கான உரிமையை அடையாளம் காணவும். சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில தேவைகள் ஒரு சில எண்ணிக்கையிலான உரிமைகளுடன் இணைக்கப்படும் என்பதை நினைவில் கொள்ளவும். சாத்தியமான இடங்களில் - இந்த உரிமையை அங்கீகரிக்கின்ற சர்வதேச மனித உரிமைகள் ஆவணங்களை பார்க்கவும்.

- மனித உரிமைகள் என்பது நாம் மனிதர்களாக இருப்பதால் நமக்கு கிடைக்கின்ற உரிமைகள் - அவை எந்த அரசாலும் வழங்கப்படுவதில்லை என்பதை விளக்கவும். மனித உரிமைகள் இல்லாமல், மனிதர்களால் ஒரு மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழ முடியாது, அல்லது நாம் மனிதர்களாக இருப்பதால், நமக்கு இருக்கின்ற தேவைகள் மற்றும் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாது. இந்த உலகளாவிய உரிமைகள் தேசியம், பாலினம், தேசிய அல்லது இன தோற்றம், நிறம், மதம், மொழி, அல்லது வேறு எந்த நிலையையும் பொருட்படுத்தாமல் நம் அனைவருக்கும் தேவைகளும் அபிலாஷைகளும் இயல்பாகவே உள்ளன. நாங்கள் அனைவரும் மனிதர்கள் என்பதால் நமது தேவைகளும் அபிலாஷைகளும் நமக்கு பொதுவானவையே. இதனால்தான் அனைத்து குழுக்களின் பட்டியல்களும் ஒரே மாதிரியான உருப்படிகளை கொண்டிருந்தன.

- ஸ்லைடுகளை பயன்படுத்தி, மனித உரிமைகளின் முக்கிய அம்சங்களையும், மனித உரிமைகளை சுற்றியுள்ள கொள்கைகளையும் விளக்கவும்.

## குறிப்புக்கள்

- மனித உரிமைகளின் **உலகளாவிய** கொள்கையானது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அடிப்படையாக இருக்கின்றது. இதன் பொருள் நாம் அனைவரும் நமது மனித உரிமைகளுக்கு சம உரிமை உடையவர்கள் என்பதாகும். அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தில் (UDHR) முதன்முதலில் வலியுறுத்தப்பட்ட இந்த கொள்கை, பல சர்வதேச மனித உரிமைகள் சம்மேளனங்கள், பிரகடனங்கள் மற்றும் தீர்மானங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

- மனித உரிமைகள் **மாற்றப்பட முடியாதவை**. குறிப்பிட்ட சூழ்நிலைகளை தவிர மற்றும் முறையான செயன்முறையின்படி, அவை எடுத்துச்செல்லப்பட கூடாது. உதாரணமாக, ஒரு நபர் நீதிமன்ற சட்டத்தினால் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால், சுதந்திரத்திற்கான உரிமை கட்டுப்படுத்தப்படலாம்.

- அனைத்து மனித உரிமைகளும் **பிரிக்கப்பட முடியாதவை மற்றும் ஒன்றையொன்று சார்ந்தவை**. இதன் பொருள் ஒரு சில உரிமைகள் மற்றவை இல்லாமல் முழுமையாக அனுபவிக்கப்பட முடியாதவை என்பதாகும். உதாரணமாக, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல் என்பது பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை பயன்படுத்துவதை எளிதாக்குகின்றது. இதேபோல, பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை மீறுவது மற்றைய பல உரிமைகளை எதிர்மறையாக பாதிக்கும்.

- **பாகுபாடின்மை:** சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை போன்றவை சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அடிப்படையான கோட்பாடுகளாகும். சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை அத்தோடு பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தை உள்ளடக்கிய பல்வேறு அடிப்படைகளிலான பாகுபாடுகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை உட்பட அனைத்து மனித உரிமைகளையும், வேறுபாடு இல்லாமல், அனுபவிப்பதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளது.

  அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் (UDHR) பிரிவு 1 இன் படி: "அனைத்து மனிதர்களும் சுதந்திரமாகவும் மற்றும் கண்ணியத்திலும் உரிமைகளிலும் சமமாக பிறந்தவர்கள்." பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள, பாகுபாட்டிலிருந்து சுதந்திரம் என்பது இந்த சமத்துவத்தை உறுதி செய்கின்றது.

- பாகுபாட்டிலிருந்து அனைவரையும் பாதுகாக்க வேண்டிய **அரச சட்டங்களும் கொள்கைகளும்** - உலகெங்கிலுமுள்ள மில்லியன் கணக்கான ஓரினச் சேர்க்கையாளர்கள் (lesbian/gay), இருபாலீர்ப்புள்ளவர் (bisexual), திருநங்கையர்/நம்பியர் (transgender) மற்றும் இடையிலிங்கத்தவர்களுக்கு (intersex persons) எதிரான நேரடி மற்றும் மறைமுக பாகுபாட்டின் மூலமாக இருக்கின்றன. உலக நாடுகளில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான நாடுகளில், தனிப்பட்ட விருப்பம் சார்ந்த ஒருபாலின உறவுமுறைகள் குற்றமாக்கப்பட்டுள்ளன. இந்த சட்டங்கள் சர்வதேச சட்டத்தில் பாதுகாக்கப்படுகின்ற, அந்தரங்கம் மற்றும் பாகுபாடின்மை ஆகிய இரண்டிற்குமான உரிமைகளை மீறுவதோடு தனிநபர்களை கைது செய்தல், வழக்குத்தொடுத்தல், சிறையிலடைத்தல் மற்றும் ஒரு சில நாடுகளில் மரணதண்டனை விதித்தல் போன்ற அபாயத்திற்கும் ஆளாக்குகின்றன. இத்தகைய சட்டங்கள் களங்கம், பாகுபாடு மற்றும் துஷ்பிரயோகத்திற்கு பயந்து சோதனை மற்றும் சிகிச்சைக்காக மக்கள் முன்வருவதை தடுப்பதன் மூலம் எச்.ஐ.வி (HIV) பரவலைத் தடுப்பதற்கான முயற்சிகளையும் தடுக்கின்றன.

  தன்பாலீர்ப்பாளர்கள், இருபாலீர்ப்புள்ளவர்கள், திருநங்கையர்/திருநம்பியர் , இடையிலிங்கத்தவர் மற்றும் பால்புதுமையினர் உள்ளிட்ட LGBTIQ சமூகம் சார்ந்த நபர்களுக்கு குறிப்பிட்ட தொழில்களை செய்வதற்கான தடைகள், சுதந்திரமான பேச்சு மற்றும் பொது ஆர்ப்பாட்டங்கள் மீதான பாரபட்சமான கட்டுப்பாடுகள் அத்தோடு ஒரே பாலின உறவுமுறைகளின் சட்டப்பூர்வ அங்கீகாரத்தை மறுப்பது ஆகியவை பாரபட்சமான நடவடிக்கைகள் குறித்த மற்றைய உதாரணங்களாகும். பல அரசுகள் திருநர்கள் அவர்களுடைய பாலினத்திற்கான சட்டப்பூர்வ அங்கீகாரத்தை பெறுவதற்கான ஒரு நிபந்தனையாக இனப்பெருக்க கட்டுப்பாட்டு சிகிச்சைக்கு முன்வர வேண்டும் என்று கோருகின்றன. அவ்வாறு இல்லாதபட்சத்தில் அவர்களுக்கு வழமையான வேலைவாய்ப்பு, சுகாதார பாதுகாப்பு, கல்வி மற்றும் பிற அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதனால் அவர்கள் சமூகத்தின் விளிம்புநிலையில் வாழவேண்டிய நிர்ப்பந்தததுக்குள்ளாகியுள்ளனர்,

- **அரசின் பொறுப்பு:** அரசுகளின் சொந்த சட்டங்களும் கொள்கைகளும் பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் மக்களுக்கு

எதிராக பாகுபாடு காட்டுவதில்லை என்பதையும் மற்றும் மூன்றாம் தரப்பினர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இத்தகைய பாகுபாடுகளுக்கு எதிராக சட்டக்கட்டமைப்பானது போதுமான பாதுகாப்பை வழங்குகின்றது என்பதையும் உறுதிசெய்கின்ற ஒரு சட்டப்பூர்வமான கடமை அரசுகளுக்கு உள்ளது. இந்த கடமை கலாசாரம், பாரம்பரியம் மற்றும் மதம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டது. அனைத்து அரசுகளும், அவற்றின் வரலாறு அல்லது பிராந்திய விவரக்குறிப்புகளை பொருட்படுத்தாமல், அனைத்து மக்களின் உரிமைகளுக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டும். LGBT மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்க மறுக்கின்ற அரசாங்கங்கள் சர்வதேச சட்டத்தை மீறுகின்றன.

## சுருக்கம்:

- மனித உரிமைகள் என்பன நாம் அனைவரும் மனிதர்களாக இருப்பதனாலேயே எங்களுக்கு இருக்கின்ற இயல்பான உரிமைகளாகும். அவை யாருக்கும் வழங்கப்படுவதுமில்லை, யாரிடமிருந்தும் எடுத்துக்கொள்ள படுவதுமில்லை மனித உரிமைகள் உலகளாவிய ரீதியானவை, மாற்றப்பட முடியாதவை, பிரிக்கப்பட முடியாதவை மற்றும் ஒன்றையொன்று சார்ந்தவையாகும்.

# அமர்வு 02: மனித உரிமைகளின் வரலாறு

*பங்கேற்பாளர்கள் மனித உரிமைகள் வரலாற்றிலுள்ள முக்கியமான நிகழ்வுகளை குழுக்களாக விளக்குவார்கள்.*

## நேரம்

1 மணித்தியாலம்

## இலக்குக் குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- மனித உரிமைகள் வரலாற்றை விவரிக்க முடியும்.
- மனித உரிமைகள் வரலாற்றிலுள்ள ஒரு நிகழ்வாக ஐக்கிய நாடுகளை ஸ்தாபிப்பதை வேறுபடுத்த முடியும்.
- மத போதனைகளில் மனித உரிமைகளின் தத்துவத்தை அவதானிக்க முடியும்.

## தேவையான கருவிகள்

- 7 அட்டைகளாக பிரிக்கப்பட்டுள்ள, கீழேயுள்ள குறிப்புக்கள் பிரிவின் அச்சுப்பிரதிகள்/ அட்டைகள்
- பிளிப் சார்ட் (Flip chart) காகிதம் மற்றும் மாக்கர்கள்

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்:

- இந்த அமர்வில், பங்கேற்பாளர்கள் மனித உரிமைகள் வரலாற்றை அறிந்துகொள்வார்கள் என்பதை விளக்கவும்.
- பங்கேற்பாளர்களை 7 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் 1 அட்டையை/ அச்சுப்பிரதியை வழங்கவும். நீங்கள் சிறிய அணிகளுக்கு குறுகிய விளக்கங்களுடன் அட்டைகளை வழங்கலாம்.
- அட்டைகளை படித்து, பிளிப் சார்ட் (Flip chart) காகிதத்தில் கதையையோ அல்லது நிகழ்வையோ விளக்குவதற்கு 20 நிமிடங்களை எடுத்துக்கொள்ளுமாறு பங்கேற்பாளர்களை கோரவும்.
- பங்கேற்பாளர்கள் கூடுதல் தகவல்களுக்காக இணையத்தை பார்க்கலாம்.
- குழுக்கள் நிகழ்வுகளை விளக்கிய பின்பு, மற்ற குழுக்களுக்கு விளக்கப்படங்களை பயன்படுத்தி கதையை சொல்லுமாறு ஒவ்வொரு குழுவையும் கோரவும்.

- ஒருமித்த உரிமைகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்ற மனித உரிமைகள் மற்றும் நவீன மனித உரிமைகள் ஆவணங்களின் சமகால புரிதல் தொடர்பான முக்கிய கோட்பாடுகளை முன்னிலைப்படுத்தவும்.
- அனைத்துலக மனித உரிமைப் பிரகடனம் (UDHR) தொடர்பான முன்வைப்பின் பொழுது, UDHR ஐ திரையில் திறந்து, பங்கேற்பாளர்களுடன் சேர்ந்து சரத்துக்களை விரைவாக பார்க்கவும்.
  https://www.un.org/en/about-us/universal-declaration-of-human-rights
  சிங்களம் மற்றும் தமிழில் UDHRஐ இங்கே காணலாம்:
  https://www.ohchr.org/EN/UDHR/Documents/UDHR_Translations/snh.pdf
  https://www.ohchr.org/EN/UDHR/Documents/UDHR_Translations/tcv.pdf
- பங்கேற்பாளர்களுக்கு கருத்து தெரிவிக்கவும் கேள்விகள் கேட்கவும் வாய்ப்பளிக்கவும்.

## குறிப்புக்கள்:

**மதம்**

**மனித உரிமைகள் பற்றிய தத்துவம் உலக மதங்கள் அனைத்திலும் உள்ளது.**

**தர்மத்தை பின்பற்றுவதில், ஒரு மனிதனுக்கு தேவையான பல மதிப்புக்கள் மற்றும் மனப்பான்மைகள், உதாரணமாக கர்வம் இல்லாமை, பாசாங்குத்தனம் இல்லாமை, உண்மையை பேசுதல், தீங்கற்ற தன்மை, உள்ளீர்த்து செயற்படல், நேர்மை மற்றும் அனைத்து உயிரினங்களுக்கும் இரக்கம் காட்டுதல் போன்றவை இந்து வேதங்களில் பட்டியலிடப்பட்டுள்ளன. அஹிம்சை (வன்முறையற்ற) பெரும்பாலும் ஒரு முழுமையான தர்மமாகவே கருதப்படுகின்றது[1].**

**புத்தபெருமான் ஞானம் பெற்ற காலத்தில் நரபலி அதிகமாக இருந்தது. கொத்தடிமை உழைப்பு, சுரண்டல், அடிமைத்தனம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் ஆகியவை பொதுவானவையாக இருந்தன. புத்தபெருமானின் அனைத்து துன்பங்களுக்குமான மாற்று மருந்து அனைத்து உயிரினங்களின் சமத்துவத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டது. உரிமைகள் பற்றிய கருத்தானது பௌத்த தத்துவத்திற்கு அந்நியமானதல்ல. இது மறைமுகமாக உள்ளது. உரிமைகள் மற்றும் கடமைகளாக பகுப்பாய்வு செய்யப்படக்கூடிய பரஸ்பர கடமைகளின் வடிவத்தில் அனைவருக்கும் கடமைகள் இருக்கின்றன. தர்மம் கடமைகளை வெளிப்படையாக தீர்மானிக்கின்றது மற்றும் உரிமைகள் மறைமுகமாக உள்ளன. எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடாத ஒரு கடமை உள்ளது (ஐந்து கட்டளைகளில் முதலாவதாக பொதிந்துள்ளது), ஏனென்றால் ஒவ்வொரு உயிரினத்திற்கும் உயிர்வாழ்வதற்கான உரிமை இருக்கின்றது[1].**

**"'உன்னிடத்தில் அன்புகூருவது போல் உன் அயலானையும் நேசிப்பாயாக', என்ற ஒரே கட்டளையில் முழுச்சட்டமும் தொகுக்கப்பட்டுள்ளது" என்று புனித வேதாகமம்/ பைபிள் கூறுகின்றது. 'உங்கள் அண்டை வீட்டாரை நேசியுங்கள்' என்பது அடிப்படையில் அனைவருடைய மனித உரிமைகளை பேணுவதற்கான ஒரு அழைப்பாகும். சுதந்திரம், சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகியவை கடவுளின் சாயலில் உருவாக்கப்படுகின்ற- மனிதனாக இருப்பதனால் அனைவருக்கும் வழங்கப்படுகின்றன[1].**

**கடவுள் மட்டுமே, சட்டத்தை வழங்குபவராக மற்றும் அனைத்து மனித உரிமைகளுக்கு ஆதாரமாக இருக்கின்றார் என்கின்ற நம்பிக்கையில் இஸ்லாத்திலுள்ள மனித உரிமைகள் உறுதியாக வேரூன்றியுள்ளன. அவர்களுடைய தெய்வீக தோற்றம் காரணமாக, எந்த ஆட்சியாளராலோ, அரசாங்கத்தாலோ, சபையாலோ அல்லது அதிகாரத்தாலோ கடவுளால் வழங்கப்பட்ட மனித உரிமைகளை எந்த வகையிலும் குறைக்கவோ அல்லது மீறவோ முடியாது, சரணடைய வைக்கவும் முடியாது1.**

**மக்னா கார்ட்டா** 1215

**சிவில் போரின் அச்சுறுத்தலின் கீழ், இங்கிலாந்தின் ஜான் மன்னர்** 1215 **இல், உரிமைகளின் ஆரம்ப வெளியீடுகளில் ஒன்றான, மக்னா கார்ட்டாவை பிரகடனப்படுத்தினார். இறையாண்மையானது சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்டது என்றும் 'சுதந்திரமான மனிதன்' சில சுதந்திரங்களை கொண்டிருப்பதாகவும் மக்னா கார்ட்டா ஆணையிட்டது. இது மத சுதந்திரத்திற்கான உரிமையையும் உறுதிப்படுத்தியது.**

**பிரிட்டிஷ் உரிமைச்சட்டம்** 1689

**இது பின்வருவனவற்றை போன்ற வரையறுக்கப்பட்ட சிவில் உரிமைகளை அங்கீகரித்த ஒரு பாராளுமன்ற சட்டமாகும்:**

- **மன்னரிடம் மனு கோருவதற்கு குடிமக்களுக்கு உரிமை உண்டு.**
- **பாராளுமன்றத்தில் பேச்சு சுதந்திரம்.**
- **அதிகப்படியான பிணை, அபராதங்கள் அல்லது கொடூரமான மற்றும் அசாதாரண தண்டனை விதிக்கப்படக்கூடாது, பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வரி விதிப்பது சட்டவிரோதமானது.**

**அமெரிக்க சுதந்திர பிரகடனம்** 1776

•எல்லோரும் சமமாக படைக்கப்பட்டவர்கள் என்றும், வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் மகிழ்ச்சியைத்தேடுதல் போன்றவை அடங்குகின்ற சில மாற்றப்பட முடியாத உரிமைகள் அவர்களை படைத்தவராலேயே அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் கூறியுள்ளது.

• பிரகடனம், எவ்வாறாயினும் அடிமைப்படுத்தலை பாதுகாத்தது.

**மனிதன் மற்றும் குடிமகன் உரிமைகள் மீதான பிரெஞ்சு பிரகடனம்** (1789)

அடக்குமுறை வரிவிதிப்பு, நிலப்பிரதித்துவ ஒடுக்குமுறை மற்றும் பிரபுக்கள் அனுபவிக்கும் சலுகைகள் மீதான வெறுப்பு ஆகியவற்றின் காரணமாக, பிரெஞ்சு மக்கள் கிளர்ச்சி செய்து முடியாட்சியை அகற்றினர். புரட்சியானது பின்வருவனவற்றை அங்கீகரித்த மனிதன் மற்றும் குடிமகன் உரிமைகள் பற்றிய பிரகடனத்திற்கு வழிவகுத்தது:

• ஆண்கள் பிறந்து சுதந்திரமாகவும் சம உரிமைகளுடனும் இருக்கிறார்கள்.
• அரசியல் ரீதியான ஒருங்கிணைப்பின் குறிக்கோளானது சுதந்திரம், சொத்துரிமை, பாதுகாப்பு மற்றும் ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பு உரிமைகள் போன்ற இயற்கை உரிமைகளை உருவாக்குவதாகும்.
• சுதந்திரம் என்பது மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்காத எதையும் செய்வதாகும்.
• சட்டம் என்பது பொதுவான விருப்பத்தின் வெளிப்பாடாகும். அதன் உருவாக்கத்திற்கு பங்களிப்பதற்கு அனைத்து குடிமக்களுக்கும் உரிமை உண்டு.
• சட்டத்தின்படி அன்றி எந்த மனிதனையும் குற்றம் சாட்டவோ, கைது செய்யவோ அல்லது காவலில் வைக்கவோ முடியாது.
• குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவர் குற்றமற்றவராவார்.
• எண்ணங்கள் மற்றும் கருத்துகளின் சுதந்திர தொடர்பாடல் மனிதனின் ஒரு உரிமையாகும்.
• ஆண்களுக்கு தனிப்பட்ட சொத்துரிமை உள்ளது.

*அக்டோபர் 1789 இல் வெர்சாய்லிஸ் இல் பெண்கள் அணிவகுப்பு நடத்திய போதிலும், பிரெஞ்சு பிரகடனத்தில் பெண்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படவில்லை.

**1945 இல் ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம்**

இரண்டாம் உலகப்போருக்கு பின்பு மனித உரிமைகள் பற்றிய எண்ணம் வலுப்பெற்றது. ஆறு மில்லியனுக்கும் அதிகமான யூதர்கள், சிந்தி மற்றும் ரோமானிய மக்கள், தன்பாலீர்ப்பாளர்கள் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோரை நாசி ஜேர்மனி அழித்து உலகையே திகிலடையச்செய்தது.

1945 இல், நாடுகள் ஒன்றிணைந்து ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கின.

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம், ஐக்கிய நாடுகள் சபையின் ஸ்தாபக ஆவணமாகும். இது 1945 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் திகதி அன்று, சர்வதேச அமைப்புக்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் முடிவில் கையொப்பமிடப்பட்டது, மேலும் 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் திகதி அன்று நடைமுறைக்கு வந்தது.

ஐக்கிய நாடுகள்/ ஐநா சாசனம் ஆண்கள் மற்றும் பெண்களின் சம உரிமைகளை அங்கீகரிப்பதற்கான முதலாவது மனித உரிமைகள் ஆவணமாகும்.

ஐக்கிய நாடுகள்/ ஐநா சாசனம் ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அங்கங்களாக நிறுவப்பட்டது: ஒரு பொதுச்சபை, ஒரு பாதுகாப்பு சபை, ஒரு பொருளாதார மற்றும் சமூக சபை, ஒரு அறங்காவலர் சபை, ஒரு சர்வதேச நீதிமன்றம் மற்றும் ஒரு செயலகம், மேலும் ஒவ்வொரு அங்கங்களின் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் அமைத்தது.

**மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம்** 1948

1948 **இல், ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம்** UDHR **என்பது தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**இரண்டாம் உலகப்போரின் மனிதாபிமானமற்ற வன்முறையை** UDHR **ஒப்புக்கொள்கின்றது மற்றும் இதேபோன்ற ஒரு பேரழிவை தடுப்பதன் அவசியத்தை குறிப்பிடுகின்றது: 'மனித உரிமைகளை அலட்சியம் மற்றும் அவமதிப்பு செய்வதே மனிதகுலத்தின் மனசாட்சியை சீற்றப்படுத்துகின்ற காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு வழிவகுத்தது. அத்தோடு பயம் மற்றும் தேவையிலிருந்து விடுதலை சாதாரணமான மக்களின் மிக உயர்ந்த அபிலாஷையாக பிரகடனப்படுத்தப்பட்டது' என்று பிரகடனத்தின் முகவுரையில் கூறப்பட்டுள்ளது.**

UDHR **ஒரு வரலாற்று சாதனையாகும். வரைவு துணைக்குழுவின் உறுப்பினரான, சிலியை சேர்ந்த ஹெர்னன் சான்டா க்ரூஸ் என்பவர்** UDHR **இன் ஏற்றுக்கொள்ளப்பட்ட தருணத்தை நினைவு கூர்ந்தார், 'ஒரு நபரின் ஒருமித்த மதிப்பு உயர்கின்ற ஒரு உண்மையான முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று நிகழ்வில் நான் பங்கேற்கின்றேன் என்பதை நான் தெளிவாக உணர்ந்தேன், ... பெரிய மண்டபத்தில் எந்தவொரு சர்வதேச அமைப்பிலும் என்னால் மீண்டும் பார்க்க முடியாத அனைத்து அட்சரேகைகளிலிருந்தும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உண்மையான ஒற்றுமை மற்றும் சகோதரத்துவ சூழலொன்று காணப்பட்டது.'**

UDHR **என்பது அனைத்து மனிதர்களுக்கும் உலகளாவிய ரீதியில் உரிமைகள் பற்றி விரிவாக அமைக்கப்பட்ட முதலாவது ஆவணமாகும். இன்று,** UDHR **என்பது** 512 **மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, உலகில் மிகவும் பிரபலமான மற்றும் மிகவும் மேற்கோள் காட்டப்பட்ட மனித உரிமைகள் ஆவணமாக நன்கு அறியப்படுகின்றது.** UDHR **என்பது பல சட்டபூர்வ மனித உரிமைகள் உடன்படிக்கைகளுக்கு உத்வேகம் அளித்துள்ளது, மற்றும் அதன் உள்ளடக்கத்தின் சில சர்வதேச சட்டத்தில் வழக்காறாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.**

## சுருக்கம்:

மனித உரிமைகள் பற்றிய எமது நவீன புரிதல் ஐக்கிய நாடுகளுடன் மிகவும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வரலாற்றில் மனித உரிமைகளின் மதிப்பு மிகவும் முன்னதாகவே இருந்துள்ளது. உலகிலுள்ள அனைத்து மதங்களும் மனிதர்களின் சமத்துவ கோட்பாடுகளை ஏதோவொரு வடிவில் உள்ளடக்கியுள்ளன.

எவ்வாறாயினும், ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையை கடைப்பிடிப்பதன் மூலம் மனித உரிமைகள் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளது. அடுத்த அமர்வில் ஐக்கிய நாடுகள் (ஐநா) இன் பங்கை விரிவாக ஆராய்வோம்.

# அமர்வு 03: இலங்கையிலுள்ள மனித உரிமைகள்

***முன்வைப்பு மற்றும் கேள்வி-பதில்***

## நேரம்

1 மணித்தியாலம்

## இலக்குக் குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தை அறிந்துகொள்ள முடியும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான முக்கிய கூறுகளை அடையாளம் காண முடியும்: சித்திரவதையிலிருந்து விடுதலை, சமத்துவத்திற்கான உரிமை, தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவலிலிருந்து சுதந்திரம், கருத்து சுதந்திரம், ஒன்றுகூடல் மற்றும் ஒருங்கிணைவு உரிமை, அத்தோடு தகவல் அறியும் உரிமை
- தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல்களை பெறுவது தொடர்பான முக்கிய படிமுறைகளை புரிந்து கொள்ள முடியும்.

## தேவையான கருவிகள்

- பிளிப் சார்ட் (Flip chart) கடதாசி மற்றும் பேனாக்கள்
- இந்த அமர்வு திட்டத்தின் முடிவில் அனெக்ஸ் (Annex) இன் 30 அச்சுப்பிரதிகள்
- அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் 30 அச்சுப்பிரதிகள். சிங்களம் மற்றும் தமிழிலுள்ள அரசியலமைப்பை இங்கே காணலாம்:
  - ஆங்கிலம் https://www.parliament.lk/files/pdf/constitution.pdf
  - சிங்களம் https://www.parliament.lk/files/pdf/constitution-si.pdf
  - தமிழ் https://www.parliament.lk/files/pdf/constitution-ta.pdf
- தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 30 அச்சுப்பிரதிகள். பிரதிகளை அரசாங்க அச்சக திணைக்களத்திலும் ஒரு பிரதிக்கு 21 ரூபாய் வீதம் நீங்கள் வாங்கலாம்.
  - ஆங்கிலம் https://www.media.gov.lk/images/pdf_word/2016/12-2016_E.pdf
  - சிங்களம் https://gic.gov.lk/gic/images/stories/pdf/rti_sin.pdf
  - தமிழ் http://www.rticommission.lk/web/images/pdf/act/rti-act-ta-13122018.pdf

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்

- ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் ஒரு பிரதியை கொடுக்கவும்
- பங்கேற்பாளர்களை 5 குழுக்களாக பிரிக்கவும். அடிப்படை உரிமைகள் அத்தியாயத்துடன் தொடர்புடைய பிரிவுகள் மற்றும் கூடுதல் அச்சுப்பிரதிகளை கவனமாக படிப்பதற்கு ஒவ்வொரு குழுவையும் 20 நிமிடங்களை எடுத்துக்கொள்ளுமாறு கேட்கவும், மேலும் ஒரு 3-5 நிமிட முன்வைப்புக்காக முக்கியமான விடயங்களை பிளிப் சார்ட் (Flip chart) காகிதத்தில் எழுதவும்.
    1. சித்திரவதையிலிருந்து விடுதலை
    2. சமத்துவத்திற்கான உரிமை
    3. தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவலில் இருந்து விடுதலை
    4. கருத்து, ஒன்றுகூடல் மற்றும் ஒருங்கிணைவு சுதந்திரம்
    5. தகவல் அறியும் உரிமை
- ஒவ்வொரு அணியையும் அதிகபட்சமாக 5 நிமிடங்களுக்கு முக்கியமான விடயங்களை முன்னிலைப்படுத்த சொல்லவும்.
- அனைத்து குழுக்களும் முன்வைத்த பின்பு, பங்கேற்பாளர்களுக்கு ஸ்லைடுகளை காட்டவும். முன்வைப்புக்கான குறிப்புக்கள் கீழேயுள்ள 'குறிப்புக்கள்' பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.

## குறிப்புக்கள்:

**உயிர்வாழ்வதற்கான உரிமை**

இலங்கை அரசியலமைப்பு உயிர்வாழ்வதற்கான உரிமையை வெளிப்படையாக அங்கீகரிக்கவில்லை, ஆனால் நீதிமன்றங்கள் வழக்குச்சட்டத்தின் மூலம் 11, 12 & 13 (4) ஆகிய உறுப்புரைகளை பயன்படுத்தி உரிமையை கூறுகின்றன. *ஸ்ரீயானி சில்வா v. இத்தமல்கொட, பயாகல* பொலிஸ் *நிலைய* பொறுப்பதிகாரி[1] வழக்கைப் பார்க்கவும். *ரத்நாயக்க தரங்க லக்மாலி v. நிரோஷன் அபேகோன்*[2] வழக்கில், பொலிஸ் காவலில் இருந்த ஒரு சந்தேக நபரின் நீதிக்குப்புறம்பான கொலையானது உயிர்வாழ்வதற்கான உரிமையை மீறுவதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**சித்திரவதையிலிருந்து விடுதலை**

அரசியலமைப்பின் 11 ஆவது உறுப்புரை அத்தோடு சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான முறையில் நடாத்தப்படுவதற்கு எதிரான 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கசட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டது.

**சமத்துவத்திற்கான உரிமை**

அரசியலமைப்பின் 12 ஆவது உறுப்புரையின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டது.

---

[1] (2003) 2 Sri LR 63

[2] (SCFR 577/2010)

**தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவலில் இருந்து விடுதலை**
அரசியலமைப்பின் 13 ஆவது உறுப்புரையின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டது.

**கருத்து, ஒன்றுகூடல் மற்றும் ஒருங்கிணைவுக்கான சுதந்திரம்**
அரசியலமைப்பின் 14 ஆவது உறுப்புரையின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டது.

**தகவல் அறியும் உரிமை**
குடிமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிற வரி மூலம் அரசாங்கமும் பொது நிறுவனங்களும் பராமரிக்கப்படுகின்றன. ஆகவே, பொதுநிதியானது அரச அதிகாரிகளால் எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பது பற்றிய தகவல்களை அறிய மக்களுக்கு உரிமை இருப்பது முக்கியமாகும்.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 19 ஆவது உறுப்புரையில், "ஒவ்வொருவருக்கும் கருத்து மற்றும் வெளிப்பாட்டு சுதந்திரம் உண்டு; இந்த உரிமையில் தலையீடு இல்லாமல் கருத்துக்களை வைத்திருப்பதற்கும் மற்றும் எந்தவொரு ஊடகத்தின் மூலமாகவும் எல்லைகளை பொருட்படுத்தாமலும் தகவல்கள் மற்றும் யோசனைகளை தேடுவதற்கும், பெறுவதற்கும் மற்றும் வழங்குவதற்குமான சுதந்திரம் அடங்குகின்றது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தின் (ICCPR) ஏற்பாடு (உறுப்புரை 19) இதே சொற்களில் இது பற்றிக் கூறுகிறது.

2011 இல் பொது அமைப்புக்களின் வசமுள்ள தகவல்களை அணுகுவதற்கான ஒரு பொதுவான உரிமையை மேற்கூறிய பிரிவு உள்ளடக்கியுள்ளது என்பதை ஒப்புக்கொள்கிற சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தின் (கருத்து மற்றும் வெளிப்பாட்டு சுதந்திரம்) 19 வது உறுப்புரை பற்றிய ஒரு பொதுவான கருத்தை ஐக்கிய நாடுகள்/ ஐநா மனித உரிமைகள் குழு வெளியிட்டது. ICCPRஇன் பிற விதிகள் மற்றைய உரிமைகளுடன் தகவல்களை அணுகுவதற்கான உரிமையையும் குறிப்பிடுகின்றன என இதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 14அ உறுப்புரை (19வது திருத்தம் – 2015 மூலம் சேர்க்கப்பட்டது) தகவல் அறியும் உரிமைக்கு உத்தரவாதமளிக்கின்றது.

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச்சட்டமும் இந்த உரிமையை மேலும் வலியுறுத்துகிறது.

### பயிற்சி வழங்குநருக்கான குறிப்பு
பங்கேற்பாளர்களை பின்வரும் பிரிவுகளுக்கு சென்று உள்ளடக்கத்தை ஆராயுமாறு கேட்டுக்கொள்கின்றோம்:

- வரைவிலக்கணம் தொடர்பான சட்டத்தின் 43 ஆவது பிரிவு - தகவல் என்றால் என்ன மற்றும் ஒரு அரச அதிகாரி என்பவர் யார்?
- தகவலை பெறுவதற்கான நடைமுறையை பற்றிய 23-29 வது பிரிவு
- தகவலை அணுகுவது பற்றிய 35 ஆவது, 36 ஆவது மற்றும் 40 ஆவது பிரிவு
- விதிவிலக்குகள் பற்றிய 5 ஆவது பிரிவு, அத்தோடு
- மேன்முறையீட்டு செயன்முறை பற்றிய பிரிவுகள்

## அடிப்படை உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள்

அரசியலமைப்பின் **15**வது உறுப்புரை அடிப்படை உரிமைகள் மீதான சில கட்டுப்பாடுகளை பட்டியலிடுகிறது:

**(1)** உறுப்புரைகள் **13(5)** மற்றும் **13(6)** மூலம் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவை தேசிய பாதுகாப்பு நலன்களுக்காக சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு மட்டுமே உட்பட்டது. இந்த பத்தியின் நோக்கங்களுக்காக "சட்டம்" என்பது தேசிய பாதுகாப்பு தொடர்பான சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகளை உள்ளடக்கியது.

**(2)** உறுப்புரை **14(1)(a)** மூலம் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமையைப் பயன்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவை இன மற்றும் மத நல்லிணக்கத்தின் நலன்களுக்காக அல்லது பாராளுமன்ற சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு அல்லது குற்றத்திற்கு தூண்டுதல் தொடர்பாக சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் அத்தகைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது,

**(3)** உறுப்புரை **14(1)(b)** மூலம் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமையைப் பயன்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவை இன மற்றும் மத நல்லிணக்கத்தின் நலன்களுக்காக சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் அத்தகைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது.

**(4)** உறுப்புரை **14(1)(c)** மூலம் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமையைப் பயன்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவை இன மற்றும் மத நல்லிணக்கம் அல்லது தேசிய பொருளாதாரத்தின் நலன்களுக்காக சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் அத்தகைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது.

**(5)** உறுப்புரை **14(1)(g)** மூலம் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமையைப் பயன்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல், தேசியப் பொருளாதாரத்தின் நலன்களுக்காக அல்லது இது தொடர்பாக சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் அடிப்படை உரிமைகள் மீதான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது.

**(**அ) தொழில்முறை, தொழில்நுட்பம், கல்வி, நிதி மற்றும் பிற தகுதிகள் எந்தவொரு தொழிலையும் நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது எந்தவொரு தொழில், வர்த்தகம், வணிகம் அல்லது நிறுவனத்தை மேற்கொள்வதற்கும், அத்தகைய அடிப்படை உரிமைக்கு உரிமையுள்ள நபரின் உரிமம் மற்றும் ஒழுங்குமுறை கட்டுப்பாடு; மற்றும்

**(**ஆ) குடிமக்கள் அல்லது வேறுவிதமாக, முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ, விலக்கப்பட்டாலும், எந்தவொரு வணிகம், தொழில், சேவை அல்லது நிறுவனத்தை ஒரு அரசு நிறுவனம் அல்லது பொது நிறுவனம் நடத்துதல்.

**(6)** உறுப்புரை 14(1)(h) மூலம் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமையைப் பயன்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவை தேசியப் பொருளாதாரத்தின் நலன்களுக்காக சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது.

**(7)** உறுப்புரை 12, 13(1), 13(2) மற்றும் 14 ஆகியவற்றால் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அடிப்படை உரிமைகளையும் செயல்படுத்துதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவை தேசிய பாதுகாப்பு, பொது நலன்களுக்காக, பொது சுகாதாரம் அல்லது ஒழுக்கத்தின் பாதுகாப்பு, அல்லது மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் மரியாதையைப் பாதுகாப்பதற்காக அல்லது ஒரு ஜனநாயக சமுதாயத்தின் பொது நலனுக்கான நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் அத்தகைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது.. இந்த பத்தியின் நோக்கங்களுக்காக "சட்டம்" என்பது பொது பாதுகாப்பு தொடர்பான சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகளை உள்ளடக்கியது.

**(8)** உறுப்புரை12(1), 13 மற்றும் 14-ன் மூலம் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல், ஆயுதப்படைகள், காவல்படை மற்றும் பொது ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்பில் உள்ள பிற படைகளின் உறுப்பினர்களுக்கு உபயோகிக்கும்போது, அவர்களின் கடமைகளை சரியான முறையில் நிறைவேற்றுதல் மற்றும் அவர்களிடையே ஒழுக்கத்தைப் பேணுதல் ஆகியவற்றின் நலன்களுக்காக சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் அத்தகைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

## தற்போதுள்ள சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும்

அடிப்படை உரிமைகள் அத்தியாயத்திற்கு முரணாக இருந்தாலும் தற்போதுள்ள அனைத்து சட்டங்களும் தொடர்ந்து அமுலில் இருப்பதாக அரசியலமைப்பின் **16**வது உறுப்புரை கூறுகிறது. இது இலங்கையின் உரிமைகள் தொடர்பான சட்டத்தில் ஒரு முக்கிய குறைபாடாகும்.

**(1)** ஏற்கனவே உள்ள அனைத்து எழுதப்பட்ட சட்டம் மற்றும் எழுதப்படாத சட்டங்கள் செல்லுபடியாகும் மற்றும் இந்த அத்தியாயத்தின் முந்தைய விதிகளுடன் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தபோதிலும்.

**(2)** தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில்**,** தற்போதுள்ள எந்தவொரு எழுதப்பட்ட சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட எந்த வகையான தண்டனைக்கும் எந்தவொரு நபரையும் உட்படுத்துவது இந்த அத்தியாயத்தின் விதிகளை மீறுவதாக இருக்காது.

### அடிப்படை உரிமை மீறலுக்கான தீர்வு

அரசியலமைப்பின் உறுப்புரை **17** கூறுகிறது, 'ஒவ்வொரு நபருக்கும் உறுப்புரை **126** இன் படி, நிர்வாக அல்லது நிறைவேற்று அதிகார நடவடிக்கை மூலம், மீறல் அல்லது உத்தேசித்த மீறல் ஏற்படுமெனின் இந்த அத்தியாயத்தின் விதிகளின் கீழ் உயர் நீதிமன்றத்திற்கு அத்தகைய நபருக்கு விண்ணப்பிக்க உரிமை உண்டு,.

**அரசியலமைப்பின் 126 வது பிரிவு, அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட ஒரு நபர் நீதித்துறை தீர்வை அணுகுவதற்கான செயல்முறையை கூறுகிறது.**

(1) உயர் நீதிமன்றம் அத்தியாயம் III அல்லது அத்தியாயம் IV ஆல் அறிவிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமையின் மீறல் அல்லது உத்தேசித்த அத்துமீறல் தொடர்பான எந்தவொரு கேள்வியையும் கேட்கவும் தீர்மானிக்கவும் ஒரே மற்றும் பிரத்தியேக அதிகார வரம்பைக் கொண்டுள்ளது

(2) எந்தவொரு நபரும் அத்தகைய நபர் தொடர்பான அத்தகைய அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை மீறப்பட்டதாக அல்லது நிர்வாக அல்லது நிறைவேற்று அதிகார நடவடிக்கையால் மீறப்பட உள்ளதாக குற்றம் சாட்டினால், அவர் தாமாகவோ அல்லது அவரது சார்பாக ஒரு வழக்கறிஞர் மூலமாகவோ, அதன் ஒரு மாதத்திற்கு, நடைமுறையில் இருக்கும்நீதிமன்ற விதிகளின்படி,மீறல் தொடர்பாக நிவாரணம் அல்லது பரிகாரம் வேண்டி நீதிமன்றத்திற்கு எழுத்துப்பூர்வமாக எழுதப்பட்ட மனு மூலம் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கவும். அத்தகைய விண்ணப்பம் உயர் நீதிமன்றத்திடம் அனுமதி பெறப்பட்டு, அனுமதியுடன் மட்டுமே தொடரலாம், இரண்டு நீதிபதிகளுக்குக் குறையாத வழக்கின்படி, அனுமதி வழங்கப்படலாம் அல்லது மறுக்கப்படலாம்.

(3) ஆட்கொணர் (Writ of Habeas Corpus), உறுதிகேள், தடையீட்டு (Writ of Prohibition), ஆணையீட்டு (Writ of Mandamus), மேற்சொல் (Writ of Procedendo) அல்லது யாதுரிமை (Writ of Qua Warranto) எழுத்தாணை உத்தரவுகளுக்கான விண்ணப்பத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கும் போது, முதற்றோற்றளவில் ஒரு தரப்பினரால் அத்தியாயம் III அல்லது அத்தியாயம் IV இன் விதிகளின் மீறல் அல்லது உடனடி மீறலுக்கான சான்றுகள் இருப்பின், அத்தகைய நீதிமன்றம் உடனடியாக உயர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுவதற்காக அத்தகைய விடயத்தை ஆற்றுப்படுத்தவேண்டும்.

(4) இந்த உறுப்புரையின் பத்திகள் (2) மற்றும் (3) இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு மனு அல்லது குறிப்பும் தொடர்பாக, நீதியானதும் ஒப்புரவானதுமாகக் கருதக்கூடிய அத்தகைய நிவாரணம் அல்லது வழிகாட்டுதல்களை வழங்க உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. அதன் கருத்தில் அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை மீறப்படவில்லை எனில், மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு இந்த விவகாரம் திரும்பும்.

(5) உயர் நீதிமன்றம் இந்தக் உறுப்புரையின் கீழ் எந்தவொரு மனுவையும் அல்லது குறிப்பையும் அத்தகைய மனுவை கோப்பிட்டு அல்லது ஆற்றுப்படுத்தி இரண்டு மாதங்களுக்குள் விசாரித்து இறுதியாக தீர்ப்பளிக்க வேண்டும்.

- **1994 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயச் சட்டம்**

- சித்திரவதைத் தடை என்பது உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளில் ஒன்றாகும், மேலும் சர்வதேசச் சட்டத்தின் ஒரு நியாயமான அல்லது சட்டபூர்வமான விதிமுறையாக அந்தஸ்தைப் பெற்றுள்ளது. 1994 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயச் சட்டத்தினை இயற்றுவதன் மூலம் சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையை இலங்கை சட்டத்தில் இணைத்தது.

  சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் போன்ற செயல்களை கடுமையான குற்றமாக மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கவும், குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் மற்றும் அதிகபட்சம் பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் பத்தாயிரம் ரூபாய்க்கு குறையாத அபராதம் விதிக்கப்படும். மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மிகாமல். இந்த குற்றமும் அடையாளம் காணக்கூடிய மற்றும் பிணையில் வெளிவர முடியாத குற்றமாக வகைப்படுத்தப்பட்டது.

  நடைமுறையில் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதில் முன்னேற்றம் மெதுவாக உள்ளது, முக்கியமாக அரசின் விருப்பமின்மை உ+ம். சட்டமா அதிபர் (Attorney General) திணைக்களத்தின் தாமதங்கள், குறிப்பிட்ட குற்றவாளிகளை குற்றஞ்சாட்ட மறுத்தல், அரசியல் தலையீடு அதிகரித்தல் போன்றவை. காவல்துறை மூலம் ஏஜியால் வழக்குகள் பதிவு செய்யப்பட வேண்டும், மேலும் இது பெரும்பாலும் காவல்துறையினரே குற்றவாளிகள் என்பதால் ஆதாய முரணுக்கு வழிவகுக்கிறது. மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் அவர்களை பாதுகாக்க அழைக்கப்படலாம். நூற்றுக்கணக்கான புகார்கள் செய்யப்பட்டாலும், வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டாலும் சில மட்டுமே தீர்ப்பு நிலைக்கு வந்தாலும், அடிப்படை உரிமைகள் விண்ணப்பம் மூலம் உயர் நீதிமன்றத்தை அணுகுவது சிறந்த வழி என்று கருதப்படுகிறது.

  சட்டம் & சமூக அறக்கட்டளையின் சமீபத்திய (ஜூன் 2021) அறிக்கை கூறுவதாவது:
  **2010** மற்றும் **2018** க்கு இடையில் மனித உரிமைகள் ஆணைக்குழு (**HRCSL)** ஒவ்வொரு இரண்டு நாட்களுக்கும் மூன்று சித்திரவதை புகார்களைப் பெற்றது, அதே நேரத்தில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான புகார்களே வழக்குத் தொடரப்பட்டன. சட்டத்தின் **25** ஆண்டுகளில் ஒன்பது தண்டனைகள் மட்டுமே உறுதி செய்யப்பட்டுள்ளன. சித்திரவதையில் இருந்து தப்பியவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு குறிப்பாக சீராக வடிவமைக்கப்பட்ட மற்றும் கிடைக்கக்கூடிய மருத்துவ, அரச உளவியல் அல்லது பாதுகாப்பு ஆதரவு சேவைகள் எதுவும் இல்லை என்றும் அறிக்கை குறிப்பிட்டது.

**2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் (ஐசிசிபிஆர்) (ICCPR) சட்டம்**

இலங்கையில் உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றொரு சட்டம் **ICCPR** சட்டம். **ICCPR** சட்டம் இலங்கை கையொப்பமிட்டுள்ள **ICCPR** இன் சில விதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டது. வன்முறை மற்றும் பாகுபாட்டைத் தூண்டும் பேச்சிலிருந்து நபர்களைப் பாதுகாப்பதே சட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

**ICCPR** சட்டத்தின் பிரிவு **3(1)** வழங்குகிறது:
**"**எந்தவொரு நபரும் பாகுபாடு**,** விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டும் தேசிய**,** இன அல்லது மத வெறுப்பை ஆதரிக்கக் கூடாது."

**ICCPR** சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட "வெறுக்கத்தக்க பேச்சு" என்ற குறுகிய பகுதி இரண்டு குறிப்பிட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக**,** ஒரு (**1**) தேசிய**, (2)** இன அல்லது (**3**) மதக் குழுவின் மீது வெறுப்புணர்வை வலியுறுத்த வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக**,** பாலினக் குழுக்கள் அல்லது குறிப்பிட்ட தனிநபர்கள் போன்ற பிற குழுக்களுக்கு எதிரான வெறுப்பை சட்டம் தடை செய்யவில்லை. இரண்டாவதாக**,** பிரச்சாரம் என்பது ஒரு குறிப்பிட்ட வகையான தூண்டுதலாக இருக்க வேண்டும். தடைசெய்யப்பட்ட "தூண்டுதல்" வகைகள் சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன: (**1**) பாகுபாடு**, (2)** விரோதம் அல்லது (**3**) வன்முறைக்கு தூண்டுதல். எனவே**,** தடைசெய்யப்படுவது ஒரு குறிப்பிட்ட வகையான "தூண்டுதல்" கொண்ட பேச்சு மட்டுமே.

Source: https://www.veriteresearch.org/2019/06/24/iccpr-act-sri-lanka/

ஒரு நபர், ஒரு மனு மூலம், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு மனித உரிமைகளையும், நிர்வாக அல்லது நிறைவேற்றதிகார நடவடிக்கையால் மீறுதல் அல்லது உடனடி மீறலுக்கு எதிராக மூன்று மாதங்களுக்குள் உயர்நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். சட்டத்தின் கீழ் தண்டனை பத்து ஆண்டுகளுக்கு மிகாமல் கடுமையான சிறைத்தண்டனையை வழங்குகிறது

## இணைப்பு

1994 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயச் சட்டம்**,**

**1.** குறுகிய தலைப்பு
இந்தச் சட்டம் 1994 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சட்டம் எனக் குறிப்பிடலாம்.

**2.** சித்திரவதை ஒரு குற்றமாக இருக்க வேண்டும்

(1) வேறு எந்த நபரையும் சித்திரவதை செய்யும் எந்தவொரு நபரும் இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தில் குற்றவாளி ஆவர்.

(2) எந்தவொரு நபரும்:
(அ) செய்ய முயற்சிகள்;
(ஆ) செய்வதில் உதவிகள் மற்றும் உதவிகள்;
(இ) செய்ய சதி செய்தல்,

(3) தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் எந்தவொரு நபரும் எழுத்துப்பூர்வ சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட எந்த வகையான தண்டனைக்கும் உட்படுத்தப்படுவது, துணைப்பிரிவு (1) இன் கீழ் ஒரு குற்றமாக கருதப்படாது.

(4) இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்குக் குற்றவாளியான ஒரு நபர், மேல் நீதிமன்றத்தின் விசாரணையை அடுத்து ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத, பத்து ஆண்டுகளுக்கு மிகாமல் சிறைத்தண்டனை மற்றும் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாத மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மிகாமல் அபராதத்துடன் தண்டிக்கப்படுவார்.

(5) இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமானது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பொருள் மற்றும் நோக்கங்களுக்காக, அறியத்தக்க குற்றமாகவும், பிணையில் வெளிவர முடியாத குற்றமாகவும் இருக்கும்.

1. போரின் போது அல்லது அவசரகாலங்களில் செய்யப்பட்ட செயல்கள் அல்லது உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில்செய்யப்பட்டவை இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்கு தற்காப்பு வாதமில்லை. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, இந்தச் சட்டத்தின் கீழ் குற்றமாகும்.

எந்தச் செயலும். செய்யப்பட்டது"

(அ) போர் நிலை, போர் அச்சுறுத்தல், உள் அரசியல் ஸ்திரமின்மை அல்லது ஏதேனும் பொது அவசரநிலை இருந்த நேரத்தில்;
(ஆ) உயர் அதிகாரி அல்லது பொது அதிகாரியின் உத்தரவின் பேரில்,

என்பது அத்தகைய குற்றத்திற்கு ஒரு பாதுகாப்பு வாதமாக இருக்கக்கூடாது.

## 12. விளக்கம்

"சமவாயம்" என்பது டிசம்பர் 10, 1984 அன்று நியூயார்க்கில் கையெழுத்திடப்பட்ட 1994 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயம்;

"பொது அதிகாரி" என்பது குடியரசின் கீழ் ஊதியம் பெறும் எந்த ஒரு பதவியையும் கொண்டவர் என்று பொருள்படும்.

"சித்திரவதை" என்பது அதன் இலக்கண மாறுபாடுகள் மற்றும் அறிவாற்றல் வெளிப்பாடுகளுடன், எந்தவொரு நபருக்கும் நிகராக இருப்பதால், உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ கடுமையான வலியை ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும் குறிக்கிறது.

(அ) பின்வரும் எந்த நோக்கத்திற்காகவும் செய்யப்படுகிறது"

(i) அத்தகைய மற்ற நபரிடமிருந்தோ அல்லது மூன்றாம் நபரிடமிருந்தோ, ஏதேனும் தகவல் அல்லது வாக்குமூலத்தைப் பெறுதல்; அல்லது

(ii) அவர் அல்லது மூன்றாவது நபர் குழுவைக் கொண்ட அல்லது செய்ததாகச் சந்தேகிக்கப்படும் எந்தவொரு செயலுக்காகவும் அத்தகைய நபரைத் தண்டிப்பது; அல்லது

(iii) அத்தகைய மற்ற நபரை அல்லது மூன்றாவது நபரை மிரட்டுதல் அல்லது வற்புறுத்துதல்; அல்லது

(b) பாகுபாட்டின் அடிப்படையில் எந்த காரணத்திற்காகவும் செய்யப்படுகிறது,

மற்றும் ஒவ்வொரு விஷயத்திலும் இருப்பது, ஒரு பொது அதிகாரி அல்லது உத்தியோகபூர்வ நிலையில் செயல்படும் மற்ற நபரின் ஒப்புதல் அல்லது அனுமதியுடன் அல்லது தூண்டுதலில் செய்யப்படும் ஒரு செயல்.

# அமர்வு 04: மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பங்களிப்பு

***ஒரு கலந்துரையாடலைத் தொடர்ந்து ஒரு செயற்பாடு.***

## நேரம்

1 மணித்தியாலம்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- ஐக்கிய நாடுகளின் அங்கங்களை அடையாளம் காண முடியும்
- சாசன அடிப்படையிலான மற்றும் உடன்படிக்கை அடிப்படையிலான மனித உரிமைகள் பொறிமுறைகளை வேறுபடுத்த முடியும்
- முக்கியமான சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களை குறிப்பிட முடியும்
- மனித உரிமைகளை கண்காணிப்பதில் ஐக்கிய நாடுகளின் பங்களிப்பை புரிந்துகொள்ள முடியும்

## தேவையான கருவிகள்

- புரொஜெக்டர் மற்றும் திரை
- பிளிப் சார்ட் (Flip chart) கடதாசி மற்றும் மாக்கர்கள்
- க்ளூ ஸ்டிக் (Glue stick)
- பின்னிணைப்பின் அச்சுப்பிரதி

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்
- பிளிப் சார்ட் (Flip chart) காகிதம்: பிளிப் சார்ட் (Flip chart) கடதாசியை 4 நிரல்களாக பிரிக்கவும். ஒவ்வொரு நிரலின் மேற்புறத்திலும் தலைப்புக்களை எழுதவும்: ஐக்கிய நாடுகள் சாசனம், சாசன-அடிப்படையிலான பொறிமுறைகள், மனித உரிமைகள் ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான பொறிமுறைகளால் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகளின் அங்கங்கள்.
- அமர்வுத்திட்டத்தின் இறுதியில் பின்னிணைப்பை அச்சிடுவதோடு, பங்கேற்பாளர்களிடையே விநியோகிக்கப்படவுள்ள ஒவ்வொரு உருப்படியையும் வெட்டியெடுத்துக்கொள்ளவும்.


## படிமுறைகள்:

- பின்னிணைப்பிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட உருப்படிகளை பங்கேற்பாளர்களிடையே விநியோகிக்கவும்.
- அடையாளம் காணப்பட்ட 4 வகைகளுள் எந்த வகையைச்சேர்ந்த பிளிப் சார்ட்டில் (Flip chart) இல் பங்கேற்பாளர்களுடைய உருப்படி இடம்பெறுமோ அதை அவர்கள் கண்டுபிடிப்பதற்கு அவர்களை கவனமாக செவிமடுக்குமாறு அறிவுறுத்தவும்.
- ஸ்லைடுகளின் உதவியுடன் விரிவுரையை நடத்தவும். குறிப்புக்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன. பங்கேற்பாளர்களுக்கு பிளிப் சார்ட் (Flip chart) இல் அவர்களுடைய கடதாசிகளை ஒட்டிக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பை வழங்குவதற்காக சரியான நேரங்களில் விரிவுரையை நிறுத்தவும்.
- பங்கேற்பாளர்களுக்கு கேள்விகளை கேட்பதற்கான ஒரு வாய்ப்பை வழங்குவதற்கு சரியான நேரங்களில் விரிவுரையை நிறுத்தவும்.
- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவால் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளில் நீங்கள் ஒரு பகுதியை அணுகுகின்ற பொழுது, விளைவுகளை யூகிப்பதற்காக பங்கேற்பாளர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கவும்.
- அமர்வின் முடிவில், பூர்த்தி செய்யப்பட்ட பிளிப் சார்ட் (Flip chart) ஐ ஆய்வு செய்வதற்கு பங்கேற்பாளர்களை அழைக்கவும்.

## குறிப்புக்கள்:

UDHR ஆனது அனைத்து மனிதர்களுடைய அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் 30 உறுப்புரைகளை அமைத்துள்ளது. எவ்வாறாயினும், இந்த உரிமைகளை செயற்படுத்துவதற்கு எந்த வழியும் இருக்கவில்லை. ஆகவே, மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் சில நடைமுறைப்படுத்தற் பொறிமுறைகளை ஐக்கிய நாடுகள் உருவாக்கியது.

இந்த மனித உரிமை பொறிமுறைகளில் சில ஐக்கிய நாடுகள் சாசனத்திலிருந்து அதிகாரத்தை பெறுகின்றன. அவை பரந்த மனித உரிமைகள் ஆணைகளை வைத்திருப்பதோடு பரந்துபட்ட பங்கேற்பாளர்களை சென்றடைகின்றன. 1945 இல் ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம் பற்றிய கலந்துரையாடலின் பொழுது முந்திய அமர்வில் ஐக்கிய நாடுகள் சாசனமானது சுருக்கமாக கலந்துரையாடப்பட்டது. இது ஐக்கிய நாடுகளின் ஸ்தாபக ஆவணமாகும். ஐக்கிய நாடுகள் சாசனம் ஐக்கிய நாடுகளின் முக்கிய அங்கங்களாக பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார மற்றும் சமூக சபை, பொறுப்பாட்சி மன்றம், சர்வதேச நீதிமன்றம் மற்றும் ஐநா செயலகம் என்பனவற்றை நிறுவியதோடு, ஒவ்வொரு அங்கங்களதும் அதிகாரங்களும் செயற்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டன.




ஐக்கிய நாடுகள் சாசனத்திலிருந்து அதிகாரத்தை பெறுகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பொறிமுறைகள் சாசன அடிப்படையிலான அமைப்புக்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**<u>சாசன அடிப்படையிலான பொறிமுறைகள்</u>**

1. மனித உரிமைகள் பேரவை

மனித உரிமைகள் பேரவை அதன் முதலாவது கூட்டத்தை 19 ஜூன் 2006 அன்று நடாத்தியது. ஜெனீவாவில் ஆண்டுக்கு 10 வாரங்கள் கூடுகின்ற இந்த அரசுகளுக்கிடையேயான அமைப்பானது, 3 ஆண்டுகள் ஆரம்ப கால சேவை செய்கின்ற, மற்றும் இரண்டு தொடர்ச்சியான தவணைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 47 ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளை கொண்டுள்ளது. மனித உரிமைகள் பேரவையானது துஷ்பிரயோகங்கள், சமத்துவமின்மை மற்றும் பாகுபாடுகளை தவிர்ப்பதற்கும், மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாப்பதற்கும், மற்றும் குற்றவாளிகளை வெளிப்படுத்துவதற்கும் அதிகாரம் பெற்ற ஒரு மன்றமாகும்.

மனித உரிமைகள் பேரவை என்பது மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR) இலிருந்து தனிப்பட்ட ஒரு நிறுவனமாக உள்ளது. இந்த வேறுபாடு பொதுச்சபையால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரத்தியேக ஆணைகளிலிருந்து உருவாகின்றது. ஆயினும்கூட, OHCHR ஆனது மனித உரிமைகள் பேரவையின் கூட்டங்களுக்கு கணிசமான ஆதரவையும், மற்றும் பேரவையின் விவாதங்களுக்கான பின்தொடர்வையும் வழங்குகின்றது.

2007 இல், மனித உரிமைகளை பாதுகாப்பதை நோக்கமாக கொண்ட 3 நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகளை பேரவை ஏற்றுக்கொண்டது.

- அனைத்து ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளிலுமுள்ள மனித உரிமைகள் நிலைமைகளை மதிப்பிடுவதற்கு உதவுகின்ற உலகளாவிய காலமுறை மீளாய்வு பொறிமுறை
- தொனிப்பொருள் சார் மனித உரிமைகள் பிரச்சினைகளில் நிபுணத்துவம் மற்றும் ஆலோசனைகளை வழங்குகிற பேரவையின் "சிந்தனைக் குழாமாக" செயற்படுகின்ற ஆலோசனை குழு
- மனித உரிமை மீறல்களை பேரவையின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களை அனுமதிக்கிற முறைப்பாட்டு நடைமுறை.

மனித உரிமைகள் பேரவையானது SOGIE பற்றிய பல அரசாங்கங்களுக்கு இடையேயான கூட்டங்கள் மற்றும் விவாதங்களை நடாத்தியது. பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையிலான வன்முறை மற்றும் பாகுபாடு குறித்து அது பலமுறை கவலை தெரிவித்தது. அத்தோடு 2016 ஆம் ஆண்டில் குறித்த பிரச்சினையை விசாரித்து முறைப்பாடு அளிப்பதற்கு ஒரு சுயாதீன நிபுணரை நியமித்தது. உலகளாவிய காலமுறை மீளாய்வின் ஒரு பகுதியாக LGBTI மக்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாட்டை எதிர்த்து போராடுவதற்கு கணிசமான பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் (115) குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்புக்களை செய்துள்ளன.

2011 மற்றும் 2014 இல், மனித உரிமைகள் பேரவையானது LGBT நபர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடு குறித்து அக்கறை கொண்டதும் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரிடம் அறிக்கைகளை கோரியதுமான தீர்மானங்களை நிறைவேற்றியது. முறையே 2012 மற்றும் 2015 இல் வெளியிடப்பட்ட உயர் ஆணையாளரின் இரண்டு அறிக்கைகள், அனைத்து பிராந்தியங்களிலுமுள்ள LGBTI மக்களின் மீது நடத்தப்படுகின்ற முறைமைப்படுத்தப்பட்ட வன்முறை மற்றும் பாகுபாட்டிலான வடிவங்களை சுட்டிக்காட்டியுள்ளன. இவை வேலைவாய்ப்பு, சுகாதார பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவற்றிலுள்ள பாகுபாட்டிலிருந்து, குற்றவியல் மற்றும் இலக்காக்கப்பட்ட உடலியல் தாக்குதல்கள், கொலைகள் வரையிலும் கூட பரந்துபட்டவை ஆகும்.

## 2. சிறப்பு நடைமுறைகள்

சிறப்பு நடைமுறைகள் என்பது குறிப்பிட்ட நாட்டின் சூழ்நிலைகள், அல்லது உலகின் அனைத்து பகுதிகளிலுமுள்ள தொனிப்பொருள் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக மனித உரிமைகள் ஆணையகத்தால் நிறுவப்பட்ட மற்றும் மனித உரிமைகள் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறிமுறைகளுக்கு கொடுக்கப்படுகிற பொதுவான பெயராகும்.

சிறப்பு நடைமுறைகள் என்பது ஒரு தனிநபர் சார்ந்ததாகவோ - ஒரு சிறப்பு அறிக்கையாளர் சார்ந்ததாகவோ அல்லது சுயாதீன நிபுணர் சார்ந்ததாகவோ, அல்லது ஒரு பணிக்குழு சார்ந்ததாகவோ உள்ளதோடு அவர்கள் மனித உரிமைகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட, ஒரு தன்னார்வ அடிப்படையில் பணிபுரிகின்ற முக்கிய, சுதந்திரமான நிபுணர்களாக இருக்கின்றனர்.

சிறப்பு நடைமுறைகளின் உரிமைக்கட்டளைகள் குறித்தவொரு நாட்டின் அல்லது நிலப்பகுதியின் மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பில் (உதாரணமாக, மியன்மார்) நாடுசார் உரிமைக்கட்டளை உடையவர்களையோ, உலகளாவிய ரீதியில் குறித்தவோர் விடயம் சார்ந்த மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பில் (உதாரணமாக, சித்திரவதை, SOGI போன்றவை) தொனிப்பொருள் சார் உரிமைக்கட்டளை உடையவர்களையோ அந்நிலைமைகள் குறித்து ஆராயுமாறும், கண்காணிக்குமாறும், ஆலோசனைகளை வழங்குமாறும் மற்றும் பகிரங்கமாக அறிக்கையிடுமாறும் கோருகின்றன. அனைவரும் மனித உரிமைகள் பேரவையில் தமது இனங்காணல்கள் மற்றும் பரிந்துரைகளை அறிக்கையிடுகின்றனர், அத்தோடு பலர் பொதுச்சபையிலும் அறிக்கையிடுகின்றனர். நாடுகளால் ஒரு மனித உரிமை ஆவணத்தை அங்கீகரிக்கப்பட வேண்டியது கட்டாயமாக இல்லாத நிலையிலேயே **உலகின் அனைத்து பகுதிகளிலுமுள்ள நிலைமைகளை இதனால் தீர்க்க முடியுமென்பதால்**, இதுவே சிலநேரங்களில் சில மனித உரிமைகள் பிரச்சினைகளுக்கு சர்வதேச சமூகத்தை எச்சரிக்கும் ஒரே பொறிமுறையாக இருக்கின்றது.

**SOGIஇற்கான சுயாதீன நிபுணர்**

**2016 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையானது 32/2 தீர்மானத்தின் மூலம், பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் வன்முறை மற்றும் பாகுபாடுகளுக்கு எதிரான பாதுகாப்பிற்கான சுயாதீன நிபுணரின் ஆணையை "IE SOGI" மூலம் உருவாக்கியது. ஜூன் 2019 இல் HRC 41/18 தீர்மானத்தின் மூலம் ஆணையை புதுப்பித்தது.**

**பணிபுரியும் முறை : விஜயம், தனிப்பட்ட தொடர்பாடல், ஆய்வு**

**SOGI இல் IE ஒரு குறுக்குவெட்டு அணுகுமுறையை பின்பற்றுகின்றார். மூல காரணங்களை பகுப்பாய்வு செய்வது, ஒரு கொடுக்கப்பட்ட இடத்தில் மற்றும் ஒரு கொடுக்கப்பட்ட நேரத்தில், பாலினம், பால், மற்றும் பாலீர்ப்பு அத்தோடு அதன் விளைவாக, சிறப்புரிமை, அல்லது வன்முறை மற்றும் பாகுபாடு ஆகியவற்றின் குறிப்பிட்ட அனுபவங்கள் தொடர்பான ஒரு விழுமியமாக கருதப்படுவதை பற்றிய ஒரு புரிதலை உருவாக்குவதற்கு வரலாற்று, சமூக-கலாசார, அரசியல் மற்றும் மானுடவியல் உட்பட, அனைத்து காரணிகளின் ஒரு பல்பரிமாண மதிப்பீடு தேவையாக இருக்கின்றதென்று IE நம்புகின்றார்.**

**தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் IE SOGI க்கு மனுக்களை தாக்கல் செய்யலாம், அதனால் SOGIஇன் அடிப்படையில் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் மீறல்களுக்கு புகாரளிக்கலாம் மற்றும் "குற்றச்சாட்டு கடிதங்கள்" அல்லது "அவசர நடவடிக்கைகள்" மூலம் தீர்வு காணமுடியும். IE SOGIஆனவர் சம்பந்தப்பட்ட அரசுக்கு கடிதம் எழுதி மற்றும் உத்தியோகபூர்வமாக கேள்விகளையும் கேட்கலாம்.**

**மற்றொரு வகையான தகவல்தொடர்பு ("Correspondence") சர்வதேச மனித உரிமைகள் தரநியமங்களுடன் அவற்றை சீரமைக்கின்ற ஒரு நோக்கில் சட்டங்கள், கொள்கைகள், மற்றும் நடைமுறைகள் குறித்து கருத்து தெரிவிப்பதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் வாய்ப்பளிக்கின்றது. மூன்றாம் தரப்பினர்களிடமிருந்து (அரசுகள் உட்பட) குறுக்கீடு இல்லாத ஒரு சூழலில் தகவல்தொடர்புகள் தொடர்பாக பரிசீலித்து, முடிவெடுக்கின்ற செயன்முறையை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, தனிப்பட்ட தகவல்தொடர்புகளுடன் இணைக்கப்பட்ட அனைத்து பணியும் OHCHR இனால் நிர்வகிக்கப்படுகின்ற வளங்களின் அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. IE SOGI இன் பார்வையில் பாதுகாப்பிற்கான ஒரு அசாதாரணமான மதிப்புமிக்க கருவியாக தகவல்தொடர்புகள் இருக்கலாம் (தற்போதைக்கு 70 ற்கும் மேற்பட்ட தகவல்தொடர்புகள் வழங்கப்பட்டுள்ளன).**

## <u>உடன்படிக்கை அடிப்படையிலான பொறிமுறைகள்</u>

உடன்படிக்கைகளிலிருந்து அதிகாரத்தை பெறுகின்ற மனித உரிமைகள் பொறிமுறைகளையும் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கியது. உடன்படிக்கைகள் என்பவை அரச தரப்புக்கள் கைச்சாத்திட்டுள்ள மனித உரிமைகள் கருவிகள் ஆகும். உடன்படிக்கைக்குக் கட்டுப்படுவதை நீங்கள் ஒப்புக்கொண்டவுடன், உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளை பாதுகாக்க வேண்டிய ஒரு கடப்பாடு உங்களுக்கு உள்ளது என்பதே இதன் கருத்தாகும்.

**9 முக்கிய சர்வதேச மனித உரிமைகள் கருவிகள் உள்ளன.**

1. ICERD - அனைத்து வகைகளிலான இன பாகுபாடுகளையும் நீக்குவதற்கான சர்வதேச சமவாயம்
2. ICCPR - சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம்
3. ICESCR - பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம்
4. CEDAW- பெண்களுக்கு எதிரான அனைத்து வகைகளிலான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான சமவாயம்
5. CAT - சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற முறையில் அல்லது இழிவாக நடத்தப்படுதல் அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயம்
6. CRC - குழந்தைகளின் உரிமைகள் பற்றிய சமவாயம்
7. ICMW - அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாப்பிற்கான சர்வதேச சமவாயம்
8. CPED - பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம்
9. CRPD - மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கான சமவாயம்

இந்த கருவிகள் ஒவ்வொன்றும் அவற்றில் கைச்சாத்திட்டுள்ள அரசுத்தரப்பினரால் உடன்படிக்கை விதிகளை செயற்படுத்துவதை கண்காணிப்பதற்கு ஒரு நிபுணர்கள் குழுவை நிறுவியுள்ளன. சில உடன்படிக்கைகள் குறிப்பிட்ட விடயங்களை கையாளுகின்ற விருப்பத்தெரிவு நெறிமுறை என்பதனையும் கொண்டுள்ளன. சித்திரவதைக்கு எதிரான சமவாயத்தின் விருப்பத்தெரிவு நெறிமுறையானது நிபுணர்களின் ஒரு குழுவையும் நிறுவியுள்ளது.

முக்கிய சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்கள் அரசுத்தரப்பினரால் அமுல்படுத்தப்படுவதை கண்காணிக்கிற மனித உரிமைகள் உடன்படிக்கை அமைப்புக்களின் மொத்த எண்ணிக்கை **பத்து** ஆகும்:

1. இன பாகுபாடுகளை அகற்றுவதற்கான குழு - (CERD)
2. பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான குழு - (CESCR)
3. மனித உரிமைகள் குழு - (CCPR)
4. பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நீக்குவதற்கான குழு - (CEDAW)
5. சித்திரவதைக்கு எதிரான குழு - (CAT)
6. குழந்தைகளின் உரிமைகளுக்கான குழு - (CRC)
7. புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான குழு - (CMW)
8. சித்திரவதை தடுப்பு துணைக்குழு - (SPT)
9. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கான குழு - (CRPD)
10. பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோர் மீதான குழு - (CED)

அவ்வப்போது, இந்த குழுக்கள் அரசுத்தரப்பினரை தமது மனித உரிமைகளின் நிலையை அறிக்கை செய்வதற்காக அழைக்கின்றன. உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்களுக்கு நிழல் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அரசுத்தரப்பு அறிக்கைகள் மற்றும் நிழல் அறிக்கைகளை பரிசீலித்ததன் பின்னர், குழுக்கள் இறுதியாக அவதானிப்புக்களை செய்கின்றன.

இந்த உடன்படிக்கைகளால் நிறுவப்பட்ட சில குழுக்கள் LGBTIQ உரிமைகள் தொடர்புடைய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிக்கல்களுடனான குறுக்குவெட்டுத் தொடர்பு குறித்து கருத்து தெரிவித்துள்ளன. மனித உரிமைகள் குழு, ESCR குழு, CEDAW குழு மற்றும் CRC குழு ஆகியவை உதாரணங்களாகும்.

ICCPR இல் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை செயற்படுத்த முற்படுகின்ற மனித உரிமைகள் குழுவானது, LGBTIQ நபர்களின் உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளை விசாரித்துள்ளது.

**மனித உரிமைகள் குழுவின் முடிவுகள்**

Toonen எ. **ஆஸ்திரேலியா வழக்கில்** (1994) **மனித உரிமைகள் குழு** (HRC) **தன்பாலீர்ப்பை குற்றமாக்கும் சட்டங்கள்** ICCPR **இன்** 17 **வது உறுப்புரையின் கூறும் அந்தரங்கத்துக்கான உரிமையின் பாதுகாப்பையும் உத்தரவாத்தினையும் மீறி உரிமையில் சட்டவிரோத தலையீட்டை உருவாக்குகிறது என்றும் உறுப்புரை** 2.1 (**பாகுபாடு இல்லாமை**) **கீழ் அதை அனுபவிப்பதற்கான உரிமையை மீறுகிறது எனவும் கூறியது.**

ICCPR **உறுப்புரைகள்**

**உறுப்புரை.** 2(1):
**இந்த உடன்படிக்கையின் ஒவ்வொரு அரசும் இனம், நிறம், பாலினம், மொழி, மதம், அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய அல்லது சமூக தோற்றம், சொத்து, பிறப்பு அல்லது பிற நிலை போன்ற எந்த வகையிலும் வேறுபாடு இல்லாமல், இந்த உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை அதன் எல்லைக்குள் மற்றும் அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட அனைத்து தனிநபர்களுக்கும் மதிப்பளித்து உறுதிப்படுத்துகிறது.**

**உறுப்புரை.** 17:
1. **எவரும் அவரது அந்தரங்கம், குடும்பம், வீடு அல்லது கடிதப் பரிமாற்றம் ஆகியவற்றில் தன்னிச்சையான அல்லது சட்டவிரோதமான தலையீட்டிற்கு உட்படுத்தப்படக்கூடாது, அல்லது அவரது மரியாதை மற்றும் நற்பெயர் மீதான சட்டவிரோத தாக்குதல்களுக்கு உட்படுத்தப்படக்கூடாது.**
2. **அத்தகைய தலையீடு அல்லது தாக்குதல்களுக்கு எதிராக சட்டத்தின் பாதுகாப்பிற்கு அனைவருக்கும் உரிமை உண்டு.**

**உறுப்புரை.**26:
**சட்டத்தின் முன் அனைத்து நபர்களும் சமமானவர்கள் மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு எந்தவித பாகுபாடுமின்றி உரிமையுடையவர்கள். இது சம்பந்தமாக, சட்டம் எந்தவொரு பாகுபாட்டையும் தடைசெய்யும் மற்றும் இனம், நிறம், பாலினம், மொழி, மதம், அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய அல்லது சமூக தோற்றம், சொத்து, பிறப்பு அல்லது பிறநிலை போன்ற எந்தவொரு அடிப்படையிலும் பாகுபாட்டிற்கு எதிராக சமமான மற்றும் பயனுள்ள பாதுகாப்பை உறுதி செய்யும்.**
**டூனென், ஒரு தன்பாலீர்ப்பாளர், ஆஸ்திரேலிய குடிமகன், டாஸ்மேனியா மாநிலத்தில் வசிப்பவர். டாஸ்மேனியா குற்றவியல் சட்டத்தின் பிரிவுகள்** 122 **மற்றும்** 123 (**ஆண்களுக்கு இடையேயான இயற்கைக்கு மாறான புணர்வு மற்றும் அநாகரீகமான பழக்கம்**) **ஆகியவை அவரது உரிமைகளை மீறுவதாக அவர் வாதிட்டார்: பாகுபாடு காட்டக்கூடாது** (ICCPR **இன் உறுப்புரை.**.2(1), **அந்தரங்கத்துக்கான உரிமை** (ICCPR **இன் உறுப்புரை.** 17) **மற்றும் எந்த பாகுபாடும் இல்லாமல் சட்டத்தின் கீழ் சம பாதுகாப்பு** (ICCPR **இன் உறுப்புரை.**26). **உறுப்புரை.** 2 (1) **மற்றும்** 17 (1) **ஆகியவற்றின் மீறலைக் குழு கண்டறிந்தது, ஆனால் உறுப்புரை.** 26 **இன் பாரபட்சமற்ற விதியை மீறுவதைக் கருத்தில் கொள்வது அவசியம் என்று கருதவில்லை. அந்தரத்துக்கான உரிமையை அனுபவிப்பது** ICCPR **இன் உறுப்புரை.** 2(1) **இன் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டது என்று குழு முடிவு செய்தது. மற்றும் உறுப்புரை**2 (1) **இல் 'பால்' என்பது 'பாலீர்ப்பினை' உள்ளடக்கியது என மனித உரிமைகள் குழு விளக்கியது.**

**பாலீர்ப்பினை உள்ளடக்க** ICCPR **இன் உறுப்புரைகள்** 2 (1) **மற்றும்** 26 **இன் கீழ் 'மற்ற நிலை' என்பதை பயன்படுத்துவது 'பால்' என்பதன் கீழ் இருப்பதை விட சிறப்பாக இருந்திருக்கும் என்று வாதிடப்படுகிறது.**

**யங் எ. ஆஸ்திரேலியாவில்** (2003), **திரு. யங் ஒரு போர் வீரரின் சார்பு ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்தார்.** 38 **வயதான அவரது இணையரும் ஆண் என்பதால், அவரது விண்ணப்பத்தை பரிசீலிக்க மத்திய படைவீரர் விவகாரத் துறை மறுத்துவிட்டது. இணையராக இருப்பதற்கு, அந்த நபர்கள் எதிர் பாலினத்தவராக இருக்க வேண்டும் என்று சட்டம் கூறியது. திரு. யங் தனது பாலீர்ப்பின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதாக புகார் கூறினார். திரு. யங்கின் பாலினம் அல்லது பாலியல் சார்பு அடிப்படையில் ஓய்வூதியத்தை மறுத்ததன் மூலம் அரசு** ICCPR **இன் பிரிவு** 26 **ஐ மீறியதாக மனித உரிமைகள் குழு கண்டறிந்தது.**

**இதேபோல்** x **எ. கொலம்பியா வழக்கில்** (2005), **பிரிவு** 26 **இன் கீழ் பாகுபாடு காட்டப்படுவதற்கு எதிரான தடையானது பாலீர்ப்பு அடிப்படையிலான பாகுபாடுகளையும் உள்ளடக்கியது, மேலும் திருமணமான தம்பதிகள் மற்றும் பாலின திருமணமாகாத தம்பதிகளுக்கு இடையிலான ன்மை உரிமைகளில் உள்ள வேறுபாடுகள் நியாயமானவை மற்றும் புறநிலையானவை என்று** HRC **சுட்டிக்காட்டியது. கேள்விக்குரிய தம்பதிகள் திருமணம் செய்து கொள்வதா இல்லையா என்பதைத் தேர்வுசெய்து, அடுத்தடுத்த அனைத்து விளைவுகளுடன். பிரிவு** 26-**ஐ மீறினால் பாதிக்கப்பட்டவர், பாலினம் அல்லது பாலியல் சார்பு அடிப்படையில் பாரபட்சமின்றி ஓய்வூதியத்திற்கான அவரது கோரிக்கையை மறுபரிசீலனை செய்வது உட்பட பயனுள்ள தீர்வுக்கு உரிமை உண்டு என்று குழு முடிவு செய்தது.**

மேலே விவாதிக்கப்பட்ட சாசன அடிப்படையிலான பொறிமுறைகள் மற்றும் உடன்படிக்கை அடிப்படையிலான பொறிமுறைகளின் பணிகளுக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் (OHCHR), ஐக்கிய நாடுகள் செயலகத்தின் ஒரு துறையாக LGBT மக்களின் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்க சிறப்பு பங்களிப்பைச் செய்துள்ளது.

OHCHR **இன் பங்களிப்பு**

2012 **மற்றும்** 2019 **ஆம் ஆண்டில்** OHCHR **ஆனது** Born Free and Equal: **சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் பாலின அடையாளம் மற்றும் பாலீர்ப்பு என்ற தலைப்பில் ஒரு சிறு புத்தகத்தை வெளியிட்டது**.

**இவை**:
(1) **தன்பாலீர்ப்பு மற்றும் திருநர் வெறுப்பு வன்முறையிலிருந்து தனிநபர்களைப் பாதுகாத்தல்**,
(2) LGBTIQ **நபர்களை சித்திரவதை மற்றும் கொடூரமான**, **மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான முறையில் நடத்துவதை தடுப்பது**,
(3) **தன்பாலீர்ப்பை குற்றமற்றதாக்குதல்**,
(4) **பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதைத் தடை செய்தல்**, **மற்றும்**
(5) LGBTIQ **நபர்களின் கருத்து சுதந்திரம்**, **ஒன்றிணைவு மற்றும் அமைதியான ஒன்றுகூடல் ஆகியவற்றை மதித்தல்**.

## இணைப்பு: (Annex:)

| |
|---|
| **ICERD - அனைத்து வகைகளிலான இன பாகுபாடுகளையும் நீக்குவதற்கான சர்வதேச சமவாயம்** |
| **ICCPR - சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம்** |
| **ICESCR - பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம்** |
| **CEDAW - பெண்களுக்கு எதிரான அனைத்து வகைகளிலான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான சமவாயம்** |
| **CAT - சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவாக நடத்தப்படுதல் அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயம்** |
| **CRC - குழந்தைகளின் உரிமைகள் பற்றிய சமவாயம்** |
| **ICMW - அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாப்பிற்கான சர்வதேச சமவாயம்** |
| **CPED வலுக்கட்டாயமாக காணாமல் போதலிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம்** |
| **CRPD - மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கான சமவாயம்** |
| **CERD - இன பாகுபாடுகளை அகற்றுவதற்கான குழு** |
| **CESCR - பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான குழு** |
| **CCPR - மனித உரிமைகள் குழு** |
| **CEDAW - பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நீக்குவதற்கான குழு** |
| **CAT - சித்திரவதைக்கு எதிரான குழு** |
| **CRC - குழந்தைகளின் உரிமைகளுக்கான குழு** |
| **CMW - புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான குழு** |
| **SPT - சித்திரவதை தடுப்பு துணைக்குழு** |
| **CRPD - மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கான குழு** |
| **CED - பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோர் மீதான குழு** |
| **சிறப்பு நடைமுறை - சிறப்பு அறிக்கையாளர்** |
| **சிறப்பு நடைமுறை - சுயாதீன நிபுணர்** |
| **சிறப்பு நடைமுறை - பணி குழு** |
| **மனித உரிமைகள் பேரவை** |
| **உலகளாவிய காலமுறை மீளாய்வு** |
| **ஆலோசனை குழு** |
| **மனித உரிமைகள் பேரவை புகார் நடைமுறை** |
| **ஐக்கிய நாடுகள் பொதுச்சபை** |
| **ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவை** |
| **ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக சபை** |
| **ஐக்கிய நாடுகள் பொறுப்பாட்சி மன்றம்** |
| **சர்வதேச நீதிமன்றம்** |
| **ஐக்கிய நாடுகள் செயலகம்** |

# அமர்வு 05: இலங்கை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களை கடைப்பிடிக்கும் பாங்கு

*முன்வைப்பு மற்றும் கேள்வி-பதில்*

## நேரம்

45 நிமிடங்கள்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால் ;

- மனித உரிமை கடப்பாடுகளை இலங்கை கடைப்பிடிப்பதை விமர்சன ரீதியாக ஆராய முடியும்.

## தேவையான கருவிகள்

- புரொஜெக்டர் (Projector) மற்றும் திரை

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்

- அடுத்த 45 நிமிடங்களில் சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளை இலங்கை கடைப்பிடிப்பது பற்றி நீங்கள் கலந்துரையாடுவீர்கள் என்பதை விளக்குவதன் மூலம் ஆரம்பிக்கவும்.
- மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் பங்களிப்பு குறித்து அமர்வில் அடையாளம் காணப்பட்ட முக்கிய சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளை நினைவுபடுத்தவும்.
- ஸ்லைடுகளை முன்வைக்கவும். விளக்கக்காட்சிகளுக்கான குறிப்புக்களை கீழே உள்ள 'குறிப்புக்கள்' பிரிவில் காணலாம்.
- கேள்விகளை முன்வைப்பதன் மூலம் பங்கேற்பாளர்களுக்கு ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை வழங்கவும்.
- அமர்வின் முடிவில், ஏதேனும் கேள்விகள் இருந்தால் அவற்றை கேட்டு, கேள்விகளுக்கான பதில்களை வழங்கவும்.

## குறிப்புக்கள்

**இலங்கை கடைப்பிடிக்கும் பாங்கு**
ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை ஒரு உறுப்பினராக இருக்கின்றது மற்றும் அனைத்து முக்கிய சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களையும் அங்கீகரித்துள்ளது. உடன்படிக்கை விதிகளுக்கு இணங்குவது குறித்த காலமுறை அரசு அறிக்கைகளை தான் ஏற்றுக்கொண்ட உடன்படிக்கை குழுக்களுக்கு சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பும் இலங்கைக்கு உண்டு. இலங்கையின் மனித உரிமைகள் கடைபிடிப்பானது மனித உரிமைகள் பேரவையினால் உலகளாவிய காலமுறை மீளாய்வின் பொழுது மதிப்பிடப்படுகின்றது.

**உலகளாவிய காலமுறை மீளாய்வு Universal Periodic Review என்றால் என்ன?**
உலகளாவிய காலமுறை மீளாய்வு (UPR) என்பது அனைத்து ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடுகளின் மனித உரிமைகள் கடைபிடிப்பினை மீளாய்வு செய்வதை உள்ளடக்குகின்ற ஒரு தனித்துவமான செயன்முறையாகும். UPR என்பது ஒவ்வொரு அரசும் தனது நாட்டில் மனித உரிமைகள் நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் அவர்களுடைய மனித உரிமைகள் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள் என்பதை பிரகடனப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கின்ற, மனித உரிமைகள் பேரவையின் அனுசரணையின் கீழிருக்கின்ற, ஒரு அரசு உந்துதல் செயன்முறையாகும்.

பேரவையின் முக்கிய அம்சங்களில் ஒன்றான, UPR ஆனது, ஒவ்வொரு நாட்டிற்கும் அவர்களுடைய மனித உரிமைகள் சூழ்நிலைகள் மதிப்பிடப்படுகின்ற பொழுது சமமான முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த பொறிமுறையின் உயர்ந்தபட்ச நோக்கம் அனைத்து நாடுகளிலுமுள்ள மனித உரிமைகள் நிலைமையை மேம்படுத்துவது மற்றும் மனித உரிமை மீறல்கள் எங்கு நடந்தாலும் அவற்றை நிவர்த்தி செய்வதுமாகும். தற்பொழுது, இந்த வகையான வேறு எந்தவொரு உலகளாவிய பொறிமுறையும் கிடையாது.
ஆதாரம்: https://www.ohchr.org/en/hrbodies/upr/pages/uprmain.aspx

4வது சுழற்சியிலுள்ள இலங்கையின் அடுத்த UPR ஜனவரி - பெப்ரவரி 2023 க்கு இடைப்பட்டதாகும். அரசு அறிக்கையின் காலக்கெடு ஒக்டோபர் 2022 ஆகும்.

**UPR (2017) இன்போது மனித உரிமைகள் பேரவையில்**

3வது UPR சுழற்சியில் நவம்பர் 2017 இல் இலங்கை மீளாய்வு செய்யப்பட்டது. 28வது UPR பணிக்குழு அமர்வுகளின் பொழுது, இலங்கைக்கு 10 SOGIESC தொடர்பான பரிந்துரைகள் கிடைத்தது.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் 3 இற்கு ஆதரவளித்து 7 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு. ஆலோசனைகளின் பொழுது, அரசியலமைப்பு சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவது மற்றும் பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் உயிர்வாழ்வதற்கான மற்றும் பாகுபாடின்மைக்கான உரிமை போன்ற குறிப்பிட்ட உரிமைகளை வழங்குகின்ற ஒரு வலுப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தை உறுதி செய்வதற்கான வாக்குறுதி உள்ளிட்ட முன்னேற்றங்களை அரசு எடுத்துரைத்தது.

தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள அனைத்து குற்றங்களும் சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக இலங்கையின் தண்டனைச்சட்டக்கோவையை சீர்திருத்துவதற்கு அரசாங்கம் உறுதியளித்தது மற்றும் 2017-2021 அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டத்தில் அர்ப்பணிப்பு பிரதிபலிக்கின்றது என்று கூறியது.

மேலதிக வாசிப்பிற்கு:
https://ilga.org/downloads/28TH_UPR_WORKING_GROUP_SESSIONS_SOGIESC_RECOMMENDATIONS.pdf

**மனித உரிமைகள் குழுவிற்கு முன் (2014)**

2014 இல், அப்போதைய இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவிற்கு முன், அரசியலமைப்பின் 12 ஆவது உறுப்புரையில் பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் பாகுபாடின்மை உள்ளடக்கப்பட்டுள்ளது என எடுத்துரைத்தது.

பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளம் போன்றவை பாகுபாடு காட்டுவதற்கு தடை செய்யப்பட்ட காரணங்கள் என்று வெளிப்படையாக கூறுவதற்கு, இலங்கை அதன் தண்டனைச்சட்டக்கோவையை திருத்தவும், அதன் அரசியலமைப்பின் 12 ஆவது உறுப்புரையை திருத்துவதற்கு பரிசீலிக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் குழு பரிந்துரைத்தது. தன்பாலீர்ப்புடையோர் (lesbian/gay), இருபாலீர்ப்புடையோர் (bisexual), திருநர் (transgender) மற்றும் இடையிலிங்கத்தவர்களின் (intersex persons) உரிமை மீறல்களுக்கு எதிராக அவர்களை பாதுகாப்பதற்கான அளவுகோல்களை வலுப்படுத்துவதுடன், இலங்கை அவர்களுடைய உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் பயிற்சியை வலுப்படுத்துதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டுமென அது பரிந்துரைக்கின்றது. (2014 ஆம் ஆண்டின் இறுதி அவதானிப்புக்களின் 8 வது பந்தி)

**CEDAW குழுவின் பரிந்துரை (2017)**

இலங்கையின் எட்டாவது காலமுறை அறிக்கை மீதான CEDAW குழுவின் இறுதி அவதானிப்புக்கள் பின்வரும் அவதானிப்பை உள்ளடக்கியது:

- அரசியலமைப்பின் தற்போதைய சீர்திருத்த செயன்முறையை குழு வரவேற்கின்றது. எவ்வாறாயினும், இந்த செயன்முறையில் பெண்களின் மட்டுப்படுத்தப்பட்ட பங்கேற்பை பற்றிய அக்கறை இருந்துகொண்டுதான் இருக்கின்றது. சமத்துவ உரிமையின் கீழ் தடைசெய்யப்படுகின்ற பாலீர்ப்பு அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுகின்றதா என்பது குறித்த நிச்சயமற்ற தன்மையை தெளிவுபடுத்துவதற்காக **குறிப்பாக பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தை பாகுபாடு காட்டாத ஒரு அடிப்படையாக உள்ளடக்குவதற்கு** அரசியலமைப்பு சபையின் அடிப்படை உரிமைகள் மீதான துணைக்குழுவின் முன்மொழிவு தொடர்பான அரசுத்தரப்பின் பதிலை கவனத்தில் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், முன்மொழிவை அரசுத்தரப்பு ஏற்றுக்கொள்வது குறித்த தெளிவின்மையை குழு அவதானிக்கின்றது.

மேலும், அரசியலமைப்பின் 12 (2) வது உறுப்புரை பெண்கள் மற்றும் ஆண்கள் சமத்துவத்தை உறுதிப்படுத்துகின்றது என்றாலும், குழு பின்வருவனவற்றை அக்கறையுடன் குறிப்பிடுகின்றது:

(அ) சமவாயத்தின் உறுப்புரை 1 இல் கூறப்பட்டுள்ளதைப் போன்று, அரசியலமைப்பின் உறுப்புரை 12 (2) பெண்களுக்கு எதிரான நேரடி மற்றும் மறைமுக பாகுபாட்டை தடை செய்யவில்லை;

(ஆ) அரசியலமைப்பின் உறுப்புரை 16 (1) அரசியலமைப்பு இயற்றப்படுவதற்கு முன்னர் இருந்த பாரபட்சமான சட்டங்களை நீதித்துறை மீளாய்வு செய்ய அனுமதிக்காது;

(இ) சட்டங்கள் மற்றும் கொள்கைகள் உட்பிரிவுநிலை பாகுபாட்டை நிவர்த்தி செய்வதில்லை.

- தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒரு காலக்கெடுவிற்குள், அரசுத்தரப்பானது.

**பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தை பாகுபாடு காட்டுவதற்கான ஒரு தடை செய்யப்பட்ட காரணமாக உள்ளடக்குவதற்கு** அரசியலமைப்பு சபையின் அடிப்படை உரிமைகள் மீதான துணைக்குழுவின் முன்மொழிவுக்கு உரிய பரிசீலனை வழங்குவதற்கு குழு **பரிந்துரைக்கின்றது**.

# அமர்வு 06: இந்திய அனுபவம்

***முன்வைப்பு மற்றும் கேள்வி-பதில்***

## நேரம்

30 நிமிடங்கள்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில் பங்கேற்பாளர்களால் ;

- ஒரே பாலின இணையர்களுக்கு இடையிலான புணர்வை குற்றமற்றதாக்குவதற்கான இந்தியாவின் பயணத்தை நினைவுகூர முடியும்.

## தேவையான கருவிகள்

- புரொஜெக்டர் (Projector) மற்றும் திரை

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்:

- அடுத்த 30 நிமிடங்களில் ஒரே பாலின இணையர்களுக்கு இடையிலான புணர்வை குற்றமற்றதாக்குவதற்கான இந்தியாவின் பயணத்தை நீங்கள் நினைவுகூர்வீர்கள் என்பதை விளக்குவதன் மூலம் ஆரம்பிக்கவும்.
- ஸ்லைடுகளை முன்வைக்கவும். முன்வைப்புகளுக்கான குறிப்புக்களை கீழே உள்ள 'குறிப்புக்கள்' பிரிவில் காணலாம்.
- 'இதன் அர்த்தம் என்னவென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?', 'அடுத்து என்ன நடந்தது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?' போன்ற கேள்விகளை முன்வைப்பதன் மூலம் பங்கேற்பாளர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை வழங்கவும்.
- இலங்கை மற்றும் இந்திய நீதித்துறை அமைப்பிலுள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை பற்றி சிந்திப்பதற்கு பங்கேற்பாளர்களுக்கு வாய்ப்பளிக்கவும்.
- அமர்வின் முடிவில், ஏதேனும் கேள்விகள் இருந்தால் அவற்றை கேட்டு, கேள்விகளுக்கான பதில்களை வழங்கவும்.

## குறிப்புக்கள்:

### *நவ்தேஜ் சிங் ஜோஹர்* எ. *இந்திய ஒன்றியம்*

ஒப்புதலுடன் கூடிய ஒரே பாலினத்தைச் சேர்ந்த வயதுவந்தவர்களுக்கு இடையிலான பாலுறவை குற்றமற்றதாக்குதல் பற்றிய இந்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பு (2018)

தன்பாலீர்ப்பானது (homosexuality) இந்திய துணைக்கண்டத்தில் வரலாறு முழுவதும் பரவலாக இருந்ததையும், பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் பொழுது சுமார் 18 ஆம் நூற்றாண்டு வரையில் தன்பாலீர்ப்பாளர்கள் (homosexuals) எந்தவொரு வகையிலும் தாழ்வாக கவனத்திற்கொள்ளப்படவில்லை என்பதையும் வரலாற்று இலக்கிய சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், 1860 ஆம் ஆண்டில் பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்திய தண்டனைச்சட்டக்கோவை, ஒப்புதலுடன் கூடிய வயதுவந்தவர்களுக்கு இடையிலான ஒரே பாலின உறவுமுறைகளை குற்றமாக்கியது.

**பிரிவு 377** இயற்கைக்கு மாறான குற்றங்கள்: ஆண்கள், பெண்கள் அல்லது மிருகங்களுடன், யாரேனும் சுயமாக (கட்டாயப்படுத்தப்படாமல்) இயற்கைக்குப் புறம்பான பாலுறவு கொண்டால், அவருக்கு பத்தாண்டுகள் வரை சிறை தண்டனையோ அல்லது ஆயுள் சிறை தண்டனையோ விதிக்கலாம். அவருக்கு அபராதமும் விதிக்கலாம். விளக்கம்: இந்த பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள குற்றத்திற்கு தேவையான பாலுறவை உருவாக்க உட்செலுத்தல் போதுமானது.

2009 இல், *நாஸ் நிறுவனம் (Naz Foundation)* எ. *டெல்லியின் NCT அரசு*[3] என்ற முக்கிய வழக்கில், டெல்லி உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகளை கொண்ட நீதிபதிகள் குழாம், ஒரே பாலின வயதுவந்தவர்களுக்கு இடையிலான பாலுறவை குற்றமாக்குவது இந்திய அரசியலமைப்பால் பாதுகாக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறுகின்றது என்று கூறியது. இந்த வழக்கு *LGBTIQ+ ஆர்வலர்களை கொண்ட ஒரு அமைப்பான நாஸ் நிறுவனத்தினால் (Naz Foundation)* தாக்கல் செய்யப்பட்டது. இந்த தீர்ப்பின் விளைவாக, இந்தியா முழுவதிலுமுள்ள ஒப்புதலுடன் கூடிய வயதுவந்தவர்கள் ஒரே பாலின பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது குற்றமற்றதாகியது.

எவ்வாறாயினும், *சுரேஷ் குமார் கௌஷல் எ. நாஸ் நிறுவனத்தில் (Naz Foundation)*[4] வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் 2 நீதிபதிகளை கொண்ட ஒரு நீதிபதிகள் குழாம் இந்திய தண்டனைச்சட்டக்கோவையின் பிரிவு 377 ஐ மீண்டும் நிலைநிறுத்தியது.
இது இருந்தபொழுதிலும், 2016 இல் இந்திய LGBTIQ+ ஆர்வலர்களால் மற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

செப்டம்பர் 6, 2018 அன்று, "ஒரே பாலினத்தைச் சேர்ந்த வயதுவந்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் நடத்தையை குற்றமாக கருதும் வரையில்" பிரிவு 377 ஆனது அரசியலமைப்பிற்கு எதிரானது என்று *நவ்தேஜ் சிங் ஜோஹர் எ. இந்திய ஒன்றியம்*[5] வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் ஒருமனதாக தீர்ப்பளித்தது.

[3] 160 Delhi Law Times 277

இந்திய அரசியலமைப்பின் 14 ஆம் (சமத்துவம்) மற்றும் 15 ஆம் (பாகுபாடின்மை) உறுப்புரைகளை மீறும் வகையில், தனிநபர்களுடைய பாலீர்ப்பு மற்றும்/ அல்லது பாலின அடையாளத்தின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக பிரிவு 377 பாகுபாடு காட்டுவதாக நீதிபதிகள் கண்டறிந்தனர். மேலும், பிரிவு 377 ஆனது, 21ஆம் உறுப்புரையின் கீழ் (உயிர்வாழ்வதற்கான மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமை) உயிர்வாழ்வதற்கான, கண்ணியத்திற்கான மற்றும் தனிப்பட்ட விருப்பத்தின் சுயாட்சிக்கான உரிமைகளை மீறுகின்றது என்று தீர்ப்பளித்தனர். இறுதியாக, உறுப்புரை 19(1)(அ) இன் கீழ் கருத்து சுதந்திரத்திற்கான உரிமையை மீறுவதன் மூலம், ஒரு LGBT தனிநபருடைய அடையாளத்தை முழுமையாக உணர்வதற்கான அவருடைய திறனை இது தடுக்கின்றது என்பதை அவர்கள் கண்டறிந்தனர். அவர்கள் அனைவரும், *தேசிய சட்ட சேவைகள் அதிகாரசபை எ. இந்திய ஒன்றியம்* (இதில் நீதிமன்றம் திருநர் அடையாளத்தை அங்கீகரித்தது) மற்றும் *புட்டசாமி எ. இந்திய ஒன்றியம்*[4] (நீதிமன்றம் அந்தரங்கத்துக்கான அடிப்படை உரிமையை அங்கீகரித்தது) ஆகிய வழக்குகளில் நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்புக்களை குறிப்பிடுகின்றனர்.

பிரிவு 377 ஐ பகுதியளவில் நீக்கியதனூடாக, நீதிபதிகள் குழாமானது *சுரேஷ் குமார் கௌஷல்* வழக்கின் தீர்ப்பை ரத்து செய்தது. பிரிவு 377 அடிப்படை உரிமைகளை எவ்வாறு மீறுகின்றது என்பதை *சுரேஷ் கௌஷல்* வழக்கு அடையாளம் காட்டுவதற்கு தவறியது என்பதை மட்டுமல்லாது, அது அரசியலமைப்பு ரீதியாக அனுமதிக்கப்பட முடியாத ஒரு நியாயத்தை நம்பியுள்ளது என்பதையும் நீதிபதிகள் குழாம் கண்டறிந்தது. சில குடிமக்கள் மட்டுமே பிரிவு 377 இனால் எதிர்மறையாக பாதிக்கப்படுகின்றதால், நீதிமன்றம் தலையிட வேண்டியதில்லை என்கின்ற சிறுபான்மையின' வாதத்தை *சுரேஷ் கௌஷல்* வழக்கில் நீதிபதிகள் பயன்படுத்தினர். அரசியலமைப்பு அனைத்து குடிமக்களுக்கும், பாலீர்ப்பு அல்லது பாலின அடையாளம் பார்க்காது, அவர்களுடைய அடிப்படை உரிமைகளுக்கான சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. நீதிமன்றம் 'அரசியலமைப்பு ஒழுக்கத்தை' பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ளது, 'பிரபலமான ஒழுக்கத்தை' அல்ல.

தலைமை நீதிபதி மிஸ்ரா தன் சார்பாகவும் நீதவான் கான்வில்கார் சார்பாகவும் எழுதிய தீர்ப்பில் அவர் ஒரு தனி நபரின் சுய தீர்மானமெடுக்கும் மற்றும் அடையாளப்படுத்தும் உரிமையை வலியுறுத்தினார். பிரிவு 377, ஒருவரின் சம்மதம் தெரிவிக்கும் ஆற்றலை அங்கீகரிக்க மறுக்கிறது எனவும் வலியுறுத்தினார். 377 ஒருவரின் உயிரியல் பண்புகளை பாரபட்சப்படுத்துவது மட்டுமன்றி ஒருவரின் சுய தெரிவுகள் சார்ந்தும் பாரபட்சப்படுத்துகிறது என அவர் ஏற்றுக்கொண்டார். அரசியலமைப்பு சட்டம் ஒருவரின் பாலியல் சுயாதீனத்தையும் சொந்த அந்தரங்க தெரிவுகளையும் பாதுகாக்கிறதென நீதிபதி மிஸ்ரா வலியுறுத்தினார். பிரிவு 377 'தெளிவான எதேச்சையான செயற்பாடு' மற்றும் 'நியாயமான வகைப்படுத்தல் பரிசோதனையை' சந்திக்க தவறுகிறது எனக்கூறி அவர் அதை ரத்து செய்தார்.

பிரிவு 377 "பழங்கால காலனித்துவ சட்டமென" நீதிபதி சந்திரசுட் கூறினார். அத்துடன் இந்த சட்டம் நாட்டின் பிரஜைகளில் ஒரு பகுதியினரை ஒதுக்கப்பட்டோராக வகுத்துள்ளது எனவும் கூறினார். புட்டஸ்வாமி வழக்கில் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமையான, பாலியல் ஈர்ப்பை தெரிவு செய்யும் உரிமை மற்றும் அந்தரங்கத்திற்கான உரிமையை இது மறுக்கிறதெனக்கூறினார். பால்நிலை அடையாளம் குறித்து அவர் கூறுகையில், மானிடர்களின் பாலியல்பினை ஆண் பெண் என்ற இருமையை வைத்து வரையறுக்க முடியாதெனக் கூறினார்.

பிரிவு 377ஐ குற்றமற்றதாக்குவது LGBT நபர்களுக்கு தம் அரசியலமைப்பு வழங்கும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான முதல் படி மட்டுமே எனவும், அரசியலமைப்பு இதைவிட அதிகம் வழங்க எதிர்நோக்குகிறது எனவும் கூறினார்.

நீதிபதி நரிமான், தன்பாலீர்ப்புள்ள பாலியல் நடத்தை ஒரு நோயல்ல எனக்கூறும், 2017ம் ஆண்டின் உளவள சட்டத்தை வலியுறுத்தினார். பிரிவு 377ல் இயற்கை மற்றும் இயற்கைக்கு மாறான எனபதற்கிடையிலான வேறுபாட்டினை காண்பிக்கவும் அது வெளிப்படையாக 14ம் உறுப்புரையினை மீறுகிறது என காண்பிக்க, இந்த சட்டத்தை பயன்படுத்தினார். மேலும் LGBT நபர்கள் சுய கௌரவத்துடன் வாழ்வதற்கான அடிப்படை உரிமை 21ம் உறுப்புரையின் படி காணப்படுகின்றதென நீதிபதி நரிமான் கூறினார். LGBT நபர்கள் எதிர்நோக்கும் களங்கத்தை குறைக்க, நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு அதிகமாக மக்களை சென்றடையச்செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அத்துடன் அவர் அரசாங்க அதிகாரிகள், விசேடமாக பொலிஸ் அதிகாரிகள் கூருணர்வுடன் நடந்துகொள்ள பயிற்சி பட்டறைகளை நடத்துமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொண்டார்.

நீதிபதி மல்ஹோத்ரா, உயிர் வாழும் உரிமை குறித்து கூறும் 21ம் உறுப்புரையிலிருந்து எழும் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்திற்கான அடிப்படை உரிமை குறித்து பேசினார். LGBT நபர்கள் குறித்து காணப்படும் களங்கம் LGBT நபர்கள் மறைவாக தம் உணர்வுகளை மறைத்து வாழ வழிவகுக்கிறது என்பதை சுட்டிக்காட்டினார். இது LGBT நபர்கள் தமக்கு தேவையான சுகாதார சேவைகளை அணுகுவதை தடுக்கிறது. அவர் இந்தியா முழுவதிலும், LGBT நபர்களிடையே அதிகமாக பரவலடைந்து காணப்படும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பாலியல் தொற்றுக்கள் குறித்த தனது கவலையை தெரிவித்தார்.

ஆதாரம்: https://www.scobserver.in/court-case/section-377-case/plain-english-short-summary-of-judgement

**இலங்கையில் ஒரே பாலின இணையர்களுக்கு இடையிலான பாலுலுறவை குற்றமற்றதாக்குவதற்கு ஏன் அதே வாதங்களை நாம் பயன்படுத்தமுடியாது?**

இந்தியாவில், ஒரு சட்டத்தின் அரசியலமைப்புத்தன்மை நீதிபதிகளால் தீர்மானிப்பப்பட முடியும். ஒரு சட்டம் அரசியலமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறினால், நீதிபதிகள் அத்தகைய சட்டத்தை செல்லாது என்று அறிவிக்கலாம். இது சட்டத்தின் நீதித்துறை மீளாய்வு என்று அழைக்கப்படுகின்றது.

ஆனால் இலங்கையில்ம 80(3) வது உறுப்புரையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன், அத்தகைய சட்டத்தின் செல்லுபடியாகுந்தன்மையை எந்த நீதிமன்றமும் கேள்வி கேட்க முடியாது என்று அரசியலமைப்பு கூறுகின்றது. ஆகவே, ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, அடிப்படை உரிமைகளை மீறினாலும் கூட, அந்த சட்டம் செல்லாது என நீதிமன்றங்களால் தீர்மானிக்க முடியாது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இலங்கையில் சட்டம் பற்றிய நீதித்துறை மீளாய்வு இல்லை. இலங்கை அரசியலமைப்பின் 16 வது உறுப்புரை, அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுடன் எந்த முரண்பாடும் இல்லாவிட்டாலும், அனைத்து எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத சட்டங்களும் செல்லுபடியாகும் மற்றும் செயற்படும் என்று கூறுகின்றது.

இதன் விளைவாக, சட்டத்திற்கான அனைத்து மாற்றங்களும் பாராளுமன்றத்திலிருந்து வர வேண்டும்.

# அமர்வு 07: யோக்யகர்த்தா கோட்பாடுகள்

***பங்கேற்பாளர்கள் கோட்பாடுகளை இருவர் கொண்ட குழுக்களாக வாசித்து குறிப்பிட்ட உரிமைகளுக்கான தேவையை நியாயப்படுத்துவார்கள். ஸ்லைடுகளின் உதவியுடனான ஒரு விரிவுரை தொடரும்.***

## நேரம்

1 மணித்தியாலம்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- யோக்யகர்த்தா கோட்பாடுகளிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை அடையாளம் காணமுடியும்.
- சில உரிமைகளின் அவசியத்தை விளக்க முடியும்.

## தேவையான கருவிகள்

- இணைப்பு : யோக்யகர்த்தா கோட்பாடுகளின் 30 அச்சுப்பிரதிகள்

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்:

- நாள் 1 இலிருந்து யோக்யகர்த்தா கோட்பாடுகளை பற்றிய கலந்துரையாடலை நினைவுபடுத்துவதன் மூலம் ஆரம்பிக்கவும்.
- பங்கேற்பாளர்களிடையே யோக்யகார்த்தா கோட்பாடுகளின் அச்சுப்பிரதிகளை விநியோகிக்கவும்
- பங்கேற்பாளர்கள் தங்களுடைய வலதுபுறத்தில் அமர்ந்திருக்கின்ற நபருடன் ஜோடி சேருமாறு கேட்டுக்கொள்ளவும், கோட்பாடுகளை ஆராய்வதற்கு 10 நிமிடங்களை எடுத்துக்கொள்ளவும், அவர்களுக்கு மிகவும் விருப்பமான <u>ஒரு</u> கொள்கையை கண்டறியவும், அத்தோடு குறிப்பிட்ட உரிமை ஏன் முக்கியம் என்று அவர்கள் நினைக்கின்றார்கள் என்பதை பற்றி சிந்திக்கவும். இந்த உரிமை மீறப்பட்டால் என்ன நடக்கும்?
- 10 நிமிடங்களுக்கு பிறகு, அவர்கள் எந்த உரிமைகளில் மிகவும் ஆர்வமாக இருந்தனர் என்பதை பற்றி அவர்களிடம் கேட்கவும். குறிப்பிட்ட உரிமைகளை பாதுகாப்பது முக்கியம் என்று அவர்கள் ஏன் நினைக்கின்றார்கள் என்று அவர்களிடம் கேட்கவும். இந்த கலந்துரையாடலுக்கு 20 நிமிடங்களை ஒதுக்கவும். பங்கேற்பாளர்களுக்கு கேள்விகளை கேட்பதற்கான வாய்ப்புக்களை கொடுக்கவும்.
- கலந்துரையாடலுக்கு பிறகு, ஸ்லைடுகளின் உதவியுடனான ஒரு விரிவுரையை நடத்தவும்.
- விரிவுரைக்கான குறிப்புக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## குறிப்புக்கள்:

**யோக்யகர்த்தா கோட்பாடுகள் (2006)**
2006 ஆம் ஆண்டில், நன்கு ஆவணப்படுத்தப்பட்ட துஷ்பிரயோக முறைகளுக்கு பதிலளிக்கின்ற விதமாக, சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்களின் புகழ்பெற்ற குழு ஒன்று பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளம் தொடர்பான சர்வதேச கோட்பாடுகளை கோடிட்டுக்காட்டுவதற்காக இந்தோனேசியாவின் யோக்யகர்த்தாவில் சந்தித்துக்கொண்டது. இதன் விளைவாக யோக்யகர்த்தா கோட்பாடுகள் உருவாக்கப்பட்டது: இது அனைத்து அரசுகளும் இணங்க வேண்டிய கட்டுப்படுத்தக்கூடிய சர்வதேச சட்ட நியமங்களை உறுதிப்படுத்துகின்ற மனித உரிமைகளுக்கான ஓர் உலகளாவிய வழிகாட்டி ஆகும். LGBTI நபர்களுக்கு சர்வதேச மனித உரிமைகள் நியமங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கான வழிகாட்டுதலாக தேசிய மற்றும் சர்வதேச நீதிமன்றங்களில் யோக்யகர்த்தா கோட்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

யோக்யகர்த்தா கோட்பாடுகள் பரந்த அளவிலான மனித உரிமைகள் நியமங்கள் மற்றும் பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாள சிக்கல்களுக்கான அவற்றின் பயன்பாடு ஆகியவற்றை குறிப்பிடுகின்றன. நீதிக்கு புறம்பான மரணதண்டனைகள், வன்முறை மற்றும் சித்திரவதை, நீதிக்கான அணுகல், அந்தரங்கத்துக்கான உரிமை, பாகுபாடின்மை, கருத்துச்சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடல், வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி, குடிவரவு மற்றும் அகதிகள் பிரச்சினைகள், பொது பங்கேற்பிற்கான உரிமைகள், மற்றும் பல்வேறு உரிமைகள் ஆகியவை இதில் அடங்குகின்றன.

மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அரசுகளின் முதன்மை கடமையை கோட்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன. ஒவ்வொரு கோட்பாடும் அர்சுகளுக்குரிய விரிவான பரிந்துரைகளுடன் உள்ளது. எவ்வாறாயினும், மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அனைத்து செயற்பாட்டாளர்கள்/ ஆர்வலர்களுக்கும் பொறுப்புக்கள் உள்ளன என்பதையும் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன. எனவே கூடுதல் பரிந்துரைகள் ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு, தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள், ஊடகங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளுக்கு வழங்கப்படுகின்றன.

**முன்னுரை:** பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் மனித உரிமை மீறல்களை முன்னுரை ஒப்புக்கொள்கின்றது, தொடர்புடைய சட்டக் கட்டமைப்பை நிறுவுவதோடு முக்கிய விதிமுறைகளின் வரையறைகளை வழங்குகின்றது.

**மனித உரிமைகளின் உலகளாவிய அனுபவத்திற்கான உரிமைகள், பாரபட்சமற்ற தன்மை மற்றும் சட்டத்தின் முன் அங்கீகாரம்:**

கோட்பாடுகள் 1-3 ஆகியவை மனித உரிமைகளின் உலகளாவிய கோட்பாடுகள் மற்றும் பாகுபாடு இல்லாமல் அனைத்து நபர்களுக்குமான அவற்றின் பயன்பாடு, அத்துடன் சட்டத்திற்கு முன்பாக அனைத்து மக்களுக்கும் அங்கீகாரம் பெறுவதற்கான உரிமை போன்றவற்றை அமைக்கின்றன.
உதாரணம்: தன்பாலீர்ப்பை (homosexuality) குற்றமாக்குகின்ற சட்டங்கள் பாகுபாடு காட்டாத சர்வதேச உரிமையை மீறுகின்றன (ஐ.நா மனித உரிமைகள் குழுவின் தீர்மானம்).

**மனித மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பிற்கான உரிமைகள்:**
கோட்பாடுகள் 4-11ஆகியவை உயிர்வாழ்வதற்கான அடிப்படை உரிமைகள், வன்முறை மற்றும் சித்திரவதையிலிருந்து சுதந்திரம், அந்தரங்கத்துக்கான உரிமை, நீதிக்கான அணுகல் மற்றும் தன்னிச்சையான தடுப்புக்காவலில் இருந்து விடுதலை போன்றவற்றை குறிப்பிடுகின்றன.

உதாரணம்: ஒரே பாலினத்தவர்களுக்கிடையில் ஒருமித்த வயது வந்தோருக்கான பாலியல் செயற்பாடுகளுக்கு மரண தண்டனை தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றது, இந்த காரணத்திற்காக மரண தண்டனை விதிக்கப்படக்கூடாது என்று ஐநா தீர்மானங்கள் வலியுறுத்துகின்றன.

**பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள்:**
கோட்பாடுகள் 12-18 ஆகியவை, வேலைவாய்ப்பு, தங்குமிடம், கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை அனுபவிப்பதில் பாகுபாடு காட்டாததன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

உதாரணம்: Lesbian மற்றும் திருநங்கைகள் பாகுபாடு, வீடற்ற தன்மை மற்றும் வன்முறை ஆகியன காரணமாக அதிக ஆபத்தில் உள்ளனர் (போதுமான வீட்டுரிமை குறித்து ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை).

**கருத்து வெளிப்பாடு, மற்றும் ஒன்றுகூடலுக்கான உரிமைகள்:**
கோட்பாடுகள் 19 முதல் 21 வரையானவை, பொதுக்கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளில் அமைதியாக பங்கேற்கின்ற உரிமைகள் உட்பட, பாலீர்ப்பு அல்லது பாலின அடையாளத்தின் அடிப்படையில் அரசின் தலையீடு இல்லாமல், ஒருவர் தன்னை, தன்னுடைய அடையாளத்தை மற்றும் தன்னுடைய பாலுணர்வை வெளிப்படுத்துவதற்கான மற்றும் இல்லையெனில் மற்றவர்களுடன் சமூகத்தில் தொடர்புகொள்வதற்கான சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

உதாரணம்: பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் சமத்துவத்தை ஊக்குவிக்கின்ற ஒரு அமைதியான கூட்டம் அதிகாரிகளால் தடைசெய்யப்பட்டது, அத்தோடு பங்கேற்பாளர்கள் காவல்துறையினாலும் மற்றும் "நாங்கள் துரத்துவோம்" மற்றும் "யூதர்களுடன் ஹிட்லர் என்ன செய்தாரோ அதை உங்களுக்கு நாங்கள் செய்வோம்" போன்ற முழக்கங்களை எழுப்புகின்ற தீவிரவாத தேசியவாதிகளாலும் துன்புறுத்தப்பட்டு மிரட்டப்பட்டனர். (இனவெறி, இனப்பாகுபாடு, அந்நியர் குறித்த வெறுப்புணர்வு (xenophobia) மற்றும் தொடர்புடைய சகிப்புத்தன்மையின் சமகால வடிவங்களை பற்றிய ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை).

**நடமாடுவதற்கான மற்றும் புகலிடத்திற்கான சுதந்திரம்:**
கோட்பாடுகள் 22 மற்றும் 23 ஆகியவை பாலீர்ப்பு அல்லது பாலின அடையாளத்தின் அடிப்படையில் துன்புறுத்தலிலிருந்து தஞ்சம் கோருகின்ற நபர்களின் உரிமைகளை எடுத்துக்காட்டுகின்றன.
உதாரணம்: பாலீர்ப்பு (ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின்/ ஆணையகத்தின் வழிகாட்டுதல்கள்) இன் அடிப்படையிலான துன்புறுத்தல் குறித்த மிகவும் அடிப்படையான ஓர் அச்சத்தை எதிர்கொள்கின்ற நபர்களுக்கு அகதிகளுக்குரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

**கலாசார உரிமை மற்றும் குடும்ப வாழ்க்கையில் பங்கேற்பதற்கான உரிமை:** 24-26 கோட்பாடுகள், பாலீர்ப்பு அல்லது பாலின அடையாளத்தின் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல், குடும்ப வாழ்க்கை, பொது விவகாரங்கள் மற்றும் அவர்களுடைய சமூகத்தின் கலாசார வாழ்க்கையில் பங்கேற்கும் நபர்களின் உரிமைகளை குறிப்பிடுகின்றன.
உதாரணம்: எஞ்சியிருப்பவர்களின்/ பிழைத்துவாழ்பவர்களின் ஓய்வூதியங்கள் (ஐ.நா மனித உரிமைகள் குழுவின் தீர்மானம்) போன்ற கூட்டாண்மை நன்மைகளை ஒதுக்கீடு செய்வதில் வெவ்வேறு-பாலின மற்றும் ஒரே-பாலின உறவுகளுக்கு இடையில் பாகுபாடு காட்டாமல் இருப்பதற்கான ஒரு கடமை அரசுகளுக்கு உள்ளது.

**மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகள்:**
கோட்பாடு 27 ஆனது பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தோடு இவ்விடயப்பரப்புகளில் பணிபுரிகின்ற மனித உரிமைகள் பாதுகாவலர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய அரசுகளின் கடமையின் அடிப்படையில் பாகுபாடில்லாமல் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான உரிமையை அங்கீகரிக்கின்றது.

உதாரணம்: உலகெங்கிலுமுள்ள பாலீர்ப்பு மற்றும் அடையாள பிரச்சினைகளில் பணிபுரிகின்ற மனித உரிமைகள் பாதுகாவலர்கள் "அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்; அவர்களுடைய வீடுகள் மற்றும் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டன, அவர்கள் தாக்கப்பட்டனர், சித்திரவதை செய்யப்பட்டனர், பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர், வழக்கமான மரண அச்சுறுத்தல்களால் துன்புறுத்தப்பட்டுள்ளனர் மற்றும் கொல்லவும் பட்டனர்.... [கவலைக்குரிய விடயம்] இது போன்ற வழக்குகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் முற்றிலும் குறைவான தீவிரத்தன்மையுடன் நடத்தப்படுகின்றன." (மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐ.நா. பொது-செயலாளரின் சிறப்பு பிரதிநிதியின் அறிக்கை).

**பரிகாரம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான உரிமைகள்:**
கோட்பாடுகள் 28 மற்றும் 29 ஆகியவை உரிமை மீறுபவர்களை பொறுப்புக்கூற வைப்பதன் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகின்றன, அத்தோடு உரிமை மீறல்களை எதிர்கொள்பவர்களுக்கு பொருத்தமான பரிகாரத்தை உறுதிசெய்கின்றன.
உதாரணம்: மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர்/ ஆணையாளர், "LGBT நபர்களுக்கு எதிரான வன்முறை குற்றங்களுக்கான தண்டனையின்மை" மற்றும் "சிறந்த பாதுகாப்பை நீட்டிப்பதற்கான அரசின் பொறுப்பு" குறித்து அக்கறை வெளியிட்டார். "LGBT நபர்களை இந்த பாதுகாப்புக்களிலிருந்து விலக்குவது, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தையும், நம் அனைவரையும் வரையறுக்கின்ற மனிதகுலத்தின் பொதுவான தரங்களையும் தெளிவாக மீறுகின்றது." என்று உயர் ஸ்தானிகர்/ ஆணையாளர் குறிப்பிடுகின்றார்.

**கூடுதல் பரிந்துரைகள்:**
தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள், தொழில்முறை அமைப்புக்கள், நிதியளிப்பவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs), மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர்/ ஆணையாளர், ஐ.நா முகவர்கள், ஒப்பந்த அமைப்புக்கள், சிறப்பு நடைமுறைகள், மற்றும் ஏனையவற்றிற்கு கோட்பாடுகள், 16 கூடுதல் பரிந்துரைகளை அமைத்துள்ளன.

உதாரணம்: மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மற்றும் இந்த நியமங்களை அவர்களுடைய வேலையில் ஒருங்கிணைப்பதற்கும் பல செயற்பாட்டாளர்/ ஆர்வலர்களின் பொறுப்பை அங்கீகரிப்பதன் மூலம் கோட்பாடுகள் பூரணமாகின்றன. டிசம்பர் 1, 2006 அன்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் ஐந்து ஐ.நா பிராந்தியங்களில் நான்கினைச் சேர்ந்த 54 அரசுகளால் வெளியிடப்பட்ட ஒரு கூட்டறிக்கை," பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் மனித உரிமை மீறல்களுக்கு உரிய கவனம் செலுத்த வேண்டும்" என்று மனித உரிமைகள் பேரவையை வலியுறுத்துகின்றது, அத்தோடு இந்த பகுதியிலுள்ள சிவில் சமூகத்தின் பணி பாராட்டத்தக்கது, மற்றும் " பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் மனித உரிமை மீறல்களை அவற்றின் தொடர்புடைய ஆணைகளுக்குள் தொடர்ந்து ஒருங்கிணைப்பதற்கு அனைத்து சிறப்பு நடைமுறைகள் மற்றும் ஒப்பந்த அமைப்புக்களை" அழைக்கின்றது. யோக்யகர்த்தா கோட்பாடுகளால் உறுதிப்படுத்தப்பட்ட இந்த வாக்குமூலம், பயனுள்ள மனித உரிமைகளின் பாதுகாப்பு உண்மையிலேயே அனைவரினுடைய பொறுப்பாகும் என்று ஏற்றுக் கொள்கின்றது.

**யோக்யகர்த்தா +10 (2017)**

10 நவம்பர் 2017 அன்று, ஒரு நிபுணர்கள் குழுவானது முதல் 29 யோக்யகர்த்தா கோட்பாடுகளுக்கு துணைபுரிகின்ற யோக்யகார்த்தா கோட்பாடுகள் +10 ஐ வெளியிட்டது, அத்தோடு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள், வறுமை மற்றும் கலாசார பன்முகத்தன்மை ஆகியவற்றை கையாளுகின்ற உரிமைகளின் வரம்பை உள்ளடக்கிய ஒன்பது கூடுதல் கோட்பாடுகளை அமைக்கின்றது. சித்திரவதை, புகலிடம், அந்தரங்கத்துக்கான உரிமை மற்றும் சுகாதாரம், அத்தோடு மனித உரிமை பாதுகாவலர்களின் பாதுகாப்பு போன்ற பகுதிகள் உட்பட, முதல் 29 கோட்பாடுகள் தொடர்பாக 111 கூடுதல் அரச கடமைகளும் உள்ளடக்கப்பட்டது.

**ஒன்பது கூடுதல் கோட்பாடுகள்:**

கோட்பாடு 30 - அரச பாதுகாப்பிற்கான உரிமை
கோட்பாடு 31 – சட்ட அங்கீகாரத்திற்கான உரிமை
கோட்பாடு 32 - உடல் மற்றும் மன ஒருமைப்பாட்டுக்கான உரிமை
கோட்பாடு 33- SOGIESCஇன் அடிப்படையிலான குற்றவியல் வழக்கு மற்றும் தண்டனையினிலிருந்துசுதந்திரத்திற்கான உரிமை
கோட்பாடு 34 – வறுமையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை
கோட்பாடு 35 – உடல் நலம்காக்கும் ஏற்பாட்டு உரிமை
கோட்பாடு 36 – தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் தொடர்பாக மனித உரிமைகளை அனுபவிப்பதற்கான உரிமை
கோட்பாடு 37 – உண்மைக்கான உரிமை
கோட்பாடு 38 – கலாசார பன்முகத்தன்மையை நடைமுறைப்படுத்துவதற்கான, பாதுகாப்பதற்கான மற்றும் பெறுவதற்கான உரிமை

ஆதாரம்:
https://www.amnestyusa.org/pdfs/YogyakartaPrinciples.pdf?_sm_au_=iVV5402rZ6PZQ066

## இணைப்பு: (Annex: )

| | |
|---|---|
| PRINCIPLE 1 | The Right to the Universal Enjoyment of Human Rights |
| PRINCIPLE 2 | The Rights to Equality and Non-Discrimination |
| PRINCIPLE 3 | The Right to Recognition before the Law |
| PRINCIPLE 4 | The Right to Life |
| PRINCIPLE 5 | The Right to Security of the Person |
| PRINCIPLE 6 | The Right to Privacy |
| PRINCIPLE 7 | The Right to Freedom from Arbitrary Deprivation of Liberty |
| PRINCIPLE 8 | The Right to a Fair Trial |
| PRINCIPLE 9 | The Right to Treatment with Humanity while in Detention |
| PRINCIPLE 10 | The Right to Freedom from Torture and Cruel, Inhuman or Degrading Treatment or Punishment |
| PRINCIPLE 11 | The Right to Protection from all Forms of Exploitation, Sale and Trafficking of Human Beings |
| PRINCIPLE 12 | The Right to Work |
| PRINCIPLE 13 | The Right to Social Security and to Other Social Protection Measures |
| PRINCIPLE 14 | The Right to an Adequate Standard of Living |
| PRINCIPLE 15 | The Right to Adequate Housing |
| PRINCIPLE 16 | The Right to Education |
| PRINCIPLE 17 | The Right to the Highest Attainable Standard of Health |
| PRINCIPLE 18 | Protection from Medical Abuses |
| PRINCIPLE 19 | The Right to Freedom of Opinion and Expression |
| PRINCIPLE 20 | The Right to Freedom of Peaceful Assembly and Association |
| PRINCIPLE 21 | The Right to Freedom of Thought, Conscience and Religion |
| PRINCIPLE 22 | The Right to Freedom of Movement |
| PRINCIPLE 23 | The Right to Seek Asylum |
| PRINCIPLE 24 | The Right to Found a Family |
| PRINCIPLE 25 | The Right to Participate in Public Life |
| PRINCIPLE 26 | The Right to Participate in Cultural Life |
| PRINCIPLE 27 | The Right to Promote Human Rights |
| PRINCIPLE 28 | The Right to Effective Remedies and Redress |
| PRINCIPLE 29 | Accountability |
| PRINCIPLE 30 | The Right to State Protection |
| PRINCIPLE 31 | The Right to Legal Recognition |
| PRINCIPLE 32 | The Right to Bodily and Mental Integrity |
| PRINCIPLE 33 | The Right to Freedom from Criminalisation and Sanction on the Basis of Sexual Orientation, Gender Identity, Gender Expression or Sex Characteristics |
| PRINCIPLE 34 | The Right to Protection from Poverty |
| PRINCIPLE 35 | The Right to Sanitation |
| PRINCIPLE 36 | The Right to the Enjoyment of Human Rights in Relation to Information and Communication Technologies |
| PRINCIPLE 37 | The Right to Truth |
| PRINCIPLE 38 | The Right to Practise, Protect, Preserve and Revive Cultural Diversity |

BRIDGE to Equality (சமத்துவத்தை தேடுதல்) என்பது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினூடாக இலங்கையில் உள்ள LGBTQ மக்களுக்கான மனித உரிமைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமாகும். LGBTQ சமூகத்திற்கான நீதி விளைவுகளை மேம்படுத்த நீதித்துறை செயற்பாட்டாளர்கள் (நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் பிற சட்ட வல்லுநர்கள்), ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களை செயல்படுத்துவதனூடாக் தற்போதைய சட்டக் கட்டமைப்பால் சுமத்தப்படும் சவால்களை சமாளிப்பதுடன், LGBTQ மக்களின் மனித உரிமைகளின் ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது.

BRIDGE to Equality (சமத்துவத்தை தேடுதல்) எனும் இந்த செயற்திட்டமானது DAST, தேசிய திருநர் வலையமைப்பு (NTN) மற்றும் யங் அவுட் ஹியர் (YOH) ஆகிய அமைப்புகளின் கூட்டாக 2021 முதல் சர்வதேச சட்டவல்லுனரகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.


facebook.com/BridgetoEquality

instagram.com/bridgetoequality2021

twitter.com/B2ECampaign

bridgetoequalitycampaign@protonmail.com